விலை ரூபா: 5.00 பக்கங்கள்:-பத்து **Registered as a News paper in Sri Lanka**

# வலம்புரி
# VALAMPURI

சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 ஐப்பசி25 திங்கட்கிழமை (11.11.2002) தொலைபேசி~ 2223378 ஒலி 327

ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது
ராம் கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

### பாதுகாப்பு உப குழுவின் சந்திப்பு நேற்று

# அதி உயர் பாதுகாப்பு வலயங்களில் மீளக்குடியமர்வு குறித்து ஆராய்வு!

## நடைமுறைப்படுத்துவதற்கு குழுக்கள் நியமனம்

**(ஓமந்தையில் இருந்து வலம்புரி சிறப்புச் செய்தியாளர்)**

**யுத்தம் காரணமாக இடம் பெயர்ந்த மக்களை வடக்குக் கிழக்கில் உள்ள இராணுவ அதி உயர் பாதுகாப்பு வலயங்களில் மீளக்குடியமர்த்துவது தொடர்பாக முக்கியத்துவம் வாய்ந்த முதலாவது உயர் மட்ட பாதுகாப்பு உப குழுக் கூட்டம் நேற்றுக் காலை 10 மணிக்கு ஓமந்தை சூனியப் பிரதேசத்தில் சுமுகமான முறையில் நடை பெற்றது.**

**இக் கூட்டத்தில் அரச தரப்பிலும், விடுதலைப்புலிகளின் தரப்பிலும் உயர் மட்ட தளபதிகள் மற்றும் அரசியற் பிரமுகர்கள் கலந்து கொண்டார்கள்.**

தாய்லாந்தில் நடந்து முடிந்த முதற்கட்டப் 2ம் சுற்று சமாதானப் பேச்சுவார்த்தையின் போது அரசும் தமிழீழ விடுதலைப்புலிகளும் இணங்கியதன் பிரகாரம் இரு தரப்பினரையும் உள்ளடக்கிய பாதுகாப்பு உப குழுவின் முதலாவது கூட்டம் ஓமந்தை சூனியப் பிரதேசத்தில் நேற்றுக் காலை 10.00 மணிக்கு ஆரம்பமானது.

அரசதரப்பு பாதுகாப்பு உயர் அதிகாரிகளும் தமிழீழ விடுதலைப் புலிகளின் தளபதிகளும் கலந்து கொண்ட இக் கூட்டத்தில் யுத்த நிறுத்த கண்காணிப்புக்குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் ரொன்ட் பியூறு ஹெவ்டே தலைமையில் நால்வர் அடங்கிய குழுவினரும் நோர்வேத் தூதுவர் ஜோன் வெஸ்பேர்க் தலைமையிலான இருவர் அடங்கிய குழுவினரும் கலந்து கொண்டனர்.

சுமார் 5 மணித்தியாலங்கள் நடைபெற்ற இப் பேச்சுவார்த்தையில் இலங்கை அரசின் சார்பில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாட்டோ, மேஜர் ஜெனரல் சாந்த கொட்டகொட, கடற்படை அதிகாரி அட்மிரல் வீரசேகர,

(10ம் பக்கம் பார்க்க)

## யாழ் - தீவகக் கடற் பரப்பில் 24 மணி நேர மீன்பிடிக்கு அனுமதி

### நேற்றைய சந்திப்பில் தீர்மானிப்பு

(ஓமந்தை)

யாழ்ப்பாணம் மேற்கு மற்றும் தீவகக் கடற்பகுதியில் 24 மணி நேரமும் மீன் பிடிப்பதற்கு அனுமதிப்பதென நேற்று ஓமந்தை சூனியப் பிரதேசத்தில் இடம்பெற்ற சந்திப்பில் அரசுப்பிரதிநிதிகளும் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளும் தீர்மானித்துள்ளனர்.

மாதகல், ஊர்காவற்துறை, காரைநகர், மண்டைதீவு, புங்குடுதீவு ஆகிய பிரதேசங்களில் உள்ள எட்டு இடங்களில் மீன் பிடிப்பதற்கு அனுமதிப்பதெனவும் இணக்கம் காணப்பட்டுள்ளது.

இந்த எட்டு இடங்களின் சரியான எல்லைகள் இம் மாதம் 13ம் திகதி வெளியிடப்படவுள்ளன. (ம)

## தாய்வான் மருத்துவக் குழு இன்று யாழ் வருகை

(யாழ்ப்பாணம்)

தாய்வான் நாட்டின் சுகாதார அமைச்சர் சூ - ரி - சூயு (Shu-Ti-Chiou) தலைமையில் கண் சத்திர சிகிச்சை நிபுணர்கள் அடங்கிய மருத்துவக் குழு ஒன்று இன்று காலை யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளது.

யாழ் வரும் இம் மருத்துவக் குழுவினர் எதிர்வரும் 15ந் திகதி வரை யாழ் போதனா வைத்தியசாலையில் பெரியளவிலான கண் சத்திர சிகிச்சை முகாமொன்றை நடத்த உள்ளனர்.

இருபது பேர் கொண்ட இக் குழுவினருடன் தாய்வானின் றோட்டறிக் கழக ஆளுநர் ஜோசப் பின் வொங் தலைமையிலான றோட்டறிக்கழக உறுப்பினர்களும் மற்றும் கொழும்பு கிழக்கு றோட்றிக்

(10ம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு உப குழுவின் கூட்டத்தில் தீர்மானங்கள் எதுவும் எட்டப்படவில்லை

### கேணல் கருணா அம்மான் தெரிவிப்பு

(ஓமந்தை)

அரச தரப்பு பிரதிநிதிகளுக்கும் ...

கடலில் மீன் பிடிப்பது தொடர்பாக பேசப்பட்ட போது இதற்கு ...

கள் தொடர்பான தீர்வுகளை எட்டுவதற்கு இப் பேச்சுவார்த்தை முதற் ...

## பல்கலை மாணவன் மரணம்

(ஓமந்தை)

அரச தரப்பு பிரதிநிதிகளுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளுக்கும் இடையே நேற்று ஓமந்தையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தையின் போது இராணுவ உயர் வலயங்களை அகற்றுவது தொடர்பாகவும், இடம்பெயர்ந்த மக்களை மீளக்குடியமர்த்துவது தொடர பாகவும் பேசப்பட்ட போதும் இறுதியான தீர்மானங்கள் எதுவும் எடுக்கப்படவில்லை என்று பேச்சுவார்த்தைக்கு தலைமை தாங்கிய கருணா அம்மான் கருத்து வெளியிட்டுள்ளார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்:-

கடலில் மீன் பிடிப்பது தொடர்பாக பேசப்பட்ட போது இதற்கு விரைவில் முடிவு காணப்படும் என யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் முன்னிலையில் எமக்கு உறுதி அளிக்கப்பட்டுள்ளது. இரு அணியினருக்கும் இடையே நடைபெற்ற பேச்சுக்கள் இரு அணியினருக்கும் இடையே இருந்த இடைவெளியை குறைத்துள்ளது என்றும் இது போன்ற சந்திப்புக்கள் பிரச்சினைகளை இலகுவாக தீர்த்து வைக்கும் என்றும் தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்கள் எதிர்கொள்கின்ற பல்வேறு பிரச்சினைகள், நெருக்கடிகள் தொடர்பான தீர்வுகளை எட்டுவதற்கு இப் பேச்சுவார்த்தை முதற்படியாக இருந்துள்ளது என்று புலித்தேவன் கருத்து வெளியிட்டுள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளின்

(10ம் பக்கம் பார்க்க)

**உள்ளே:-**

☞ யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி அனுமதிக்காக நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்ட மேலும் ஒரு தொகுதி மாணவர்களின் பெயர் விபரம்

☞ மீளளிப்பு கடன் பெறுவோர் விபரம்

# பல்கலை மாணவன் மரணம் 13 மாணவர்கள் கைது

(கொழும்பு)

ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக் கழகத்தில் பகிடிவதை தொடர்பான கைகலப்பில் உயிரிழந்த மாணவனின் மரணம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் 13 மாணவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் சந்தேக நபர்களில் சிலர் எம்.பி ஒருவரின் வீட்டில் ஒளித்திருப்பதாகவும் பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கொழும்பிலும், களனியிலும் பொலிஸார் நேற்றுக் காலை விஷேட தேடுதல் வேட்டையில் இறங்கினர்.

களனிப் பல்கலைக் கழகம் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடத்திய போது பல்கலைக்கழக விடுதிப் பகுதியில் இருந்த மாணவர்கள் 7 பேர்களை பொலிஸார் சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர். ஏனைய

(10ம் பக்கம் பார்க்க)

# முஸ்லிம் காங்கிரஸின் 9 எம்.பிக்களும் பாராளுமன்றில் தனித்து இயங்குவர்!

## அமைச்சர் நூர்தீன் வலம்புரிக்கு தெரிவிப்பு

(கொழும்பு)

பாராளுமன்ற பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுப் பின் அப் பகிஷ்கரிப்பைக் கைவிட்ட முஸ்லிம் காங்கிரஸின் 9 பாராளுமன்ற உறுப்பினர்களும் பாராளுமன்றத்தில் தனித்து செயற்படப் போவதாக, வன்னி மாவட்ட புனர்வாழ்வு அமைச்சர் நூர்தின் மசூர் நமது நிருபரிடம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அமைச்சர் நூர்தின் மசூர் மேலும் தெரிவிக்கையில,

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைமைப் பீடத்துடனான முரண்பாடுகள் தொடர்ந்து இருப்பதனாலும் இம் முரண்பாடுகளைக் களைய தலைமைப் பீடம் உறுதியான முடிவுகளை எடுக்கும் வரை 9 உறுப்பினர்களும் பாராளுமன்றத்தில் தனித்தே செயற்படவுள்ளனர்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் உயர் மட்டக் கூட்டம் இன்னமும் சில தினங்களில் நடைபெற

(10ம் பக்கம் பார்க்க)

### பிரதமரிடம் விளக்கம் கோரி

# அமைச்சர்களின் பட்டியலை ஜனாதிபதி திருப்பி அனுப்பினார்

(கொழும்பு)

அமைச்சரவை அந்தஸ்தற்ற அமைச்சர்களாக நியமிக்கப்படுவதற்கு 7 எம்.பிக்களின் பெயர்களையும் பிரதி அமைச்சர்களாக நியமிக்கப்படுவதற்கு ஒருவரின் பெயரையும் சிபார்சு செய்ய பிரதமர் ரணில், ஜனாதிபதிக்கு அனுப்பி வைத்திருந்த பட்டியல் மீண்டும் பிரதமருக்கே திருப்பி அனுப்பப்பட்டுள்ளது. இவர்களுக்கு கையளிக்கப்படவிருக்கும் விடயங்கள், அதிகாரங்கள், தொழிற்பாடுகள் என்பன இபபோது இயங்கி வரும் அமைச்சுக்களின் தொழிற்பாடுகள் அதிகாரங்களுடன் கலக்கப்பட்டு தெளிவான வரையறையற்றவையாக உள்ளன இவை பற்றி தெளிவுபடுத்தும்படி ஜனாதிபதி கோரியுள்ளார்.

வியாழக்கிழமை பிரதமரால் அனுப்

(10ம் பக்கம் பார்க்க)

# நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## பாராளுமன்ற அங்கீகாரமின்றி ஆயுதக் கொள்வனவினால் தான்
# பொ.ஐ.மு. அரசு வீழ்ந்தது
### -பிரதிஅமைச்சர் நவீன்

(கொழும்பு)

பாராளுமன்றத்தின் அங்கீகாரம் இன்றி கடந்தகாலத்தில் ஆயுதக்கொள்வனவுக்கென சுமார் 23மில்லியன் ரூபாவை பொதுஜனஐக்கிய முன்னணி செலவிட்ட காரணத்தால்தான் அந்தஅரசு வீழ்ச்சிகண்டது இவ்வாறு பெருந்தோட்ட கைத்தொழில் பிரதி அமைச்சர் நவீன் திஸ்ஸநாயக்க நேற்றுபாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் பொதுஜனஐக்கியமுன்னணி அரசின்இவ்வாறான திட்டமிடாத நடவடிக்கைக்கு தற்போதுஆட்சியில் இருக்கும் ஐக்கியதேசிய முன்னணி அரசே பரிகாரம் தேட வேண்டியநிலை ஏற்பட்டுள்ளது:

நாட்டின் பொருளாதாரத்தில் தளம்பல்நிலை ஏற்பட்டுள்ள நிலையில் பிரதமர் தலைமையிலான அரசினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள சமாதான நடவடிக்கைகள் எவ்வாறு முடிவடையுமென திட்டவட்டமாக கூறமுடியாது என்கிறார்.

எவ்வாறாயினும் நாட்டின் பாதுகாப்பை பலப்படுத்த வேண்டிஉள்ளது எனவும் அவர்மேலும் தெரிவித்துள்ளார்.

(க-8)

## பொலிஸ் ஆணைக்குழு அமைப்பு வேலைகள்துரிதம்
### உள்துறை அமைச்சர் தகவல்

சுதந்திரபொலிஸ் ஆணைக்குழு அமைப்பது தொடர்பான நடவடிக்கைகள் விரைவில் ஆரம்பிக்கப்படும் என்று உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்தார்.

பாராளுமன்றம் நேற்று பிற்பகல் ஒத்திவைக்கப்பட்ட சமயத்தில் இடம்பெற்ற விவாதத்தில் உரை நிகழ்த்தும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்;

ஆணைக்குழுவிற்கான தலைவரும் ஏனைய உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர் எனவும் தெரிவித்தார். (கபி-08)

### ஆணைக் குழுக்களின் அதிகாரி யார் - எவர்?

(கொழும்பு)

உத்தேச சுதந்திர ஆணைக்குழுக்களுக்கான அதிகாரிகளின் பெயர்களை பிரேரிக்கும் பணிகள் பூர்த்தி அடைந்துள்ளதாக சபாநாயகர் யோசப் மைக்கல் பெரேரா தெரிவித்துள்ளார்.

இவ் ஆணைக்குழுவுக்கு பிரேரிக்கப்பட்ட அதிகாரிகளின் பெயர்கள் அரசியலமைப்பு சபையின் ஊடாக ஜனாதிபதிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

ஆணைக்குழுக்களின் அதிகாரிகளை தெரிவுசெய்யும் அதிகாரம் ஜனாதிபதிக்கே உண்டு எனவும் அவர்மேலும் தெரிவித்துள்ளார்.

(க-பி9)

## காஞ்சிரங்குடாவில் பலியானோருக்கு ரூபா50 ஆயிரம் வழங்க சிபார்சு

(கொழும்பு)

கடந்த ஒக்டோபர் 9 ஆம் திகதி காஞ்சிரங்குடா அதிரடிப்படை முகாம் முன்பாக நடைபெற்ற சம்பவங்கள் பற்றி விசாரணை செய்த முன்னாள் விமானப்படைத் தளபதி எயர் வைஸ் மார்ஷல் ஹரி குணதிலக தலைமையிலான குழு கொல்லப்பட்ட ஒவ்வொருவரினதும் குடும்பங்களுக்கு ரூபா 50,000 நட்டஈடு வழங்குமாறு சிபார்சு செய்துள்ளது. காயமடைந்தவர்கள் தொடர்பாக நட்டஈடெதுவும் சிபார்சு செய்யப்பட்டிருக்கவில்லை. இறந்தவர்களின் குடும்பங்களின் வறிய நிலையை கருத்தில் கொண்டே மேற்படி நட்டஈடுசிபார்சு செய்யப்பட்டுள்ளது. இதேபோன்ற கொடுப்பனவுகள் பிந்துனுவெவ மாவனல்ல சம்பவங்களின் போது பலியானவர்களின் குடும்பங்களுக்கும் வழங்கப்பட்டிருந்தன.

அத்துடன் ஆறு மாதங்களுக்கொருதடவை பொலிஸாரோ இராணுவத்தினரோ ஒரு முகாமிலிருந்து இடமாற்றம் செய்யப்பட வேண்டும் என்றும் ஆர்ப்பாட்டங்கள் போன்ற விவகாரங்களை சாதுரியமாக கையாளுவதற்கு பயிற்சி வழங்கப்பட வேண்டுமென்றும் ஹரி குணதிலக தெரிவித்தார்.

கையளிப்பு வைபவத்தில் உரையாற்றிய உட்துறையமைச்சர் ஜோன் அமரதுங்க உண்மை விபரங்களடங்கிய அறிக்கையொன்றை புலிகளுக்கும் அனுப்பிவைக்குமாறு அங்கிருந்த குழு உறுப்பினர் விவேகானந்தனைக் கேட்டுக்கொண்டார். விவேகானந்தன் தன்னால் உடன்படமுடியாத விடயங்களை குறித்துக் காட்டி தனியானதொரு அறிக்கையை சமர்ப்பித்திருந்தார் ஆர்ப்பாட்டக்கார மீது துப்பாக்கி பிரயோகம் செய்யப்பட்டதை நியாயப்படுத்த முடியாது என்றும் தாக்கத்தை விளைவிக்கக் கூடியவையான புதிய கண்ணீர்புகைக்குண்டுகள் பயன்படுத்தப்பட்டிருந்தால் துப்பாக்கிச் சூடுகளைத் தவிர்த்திருக்க முடியுமென்றும் விவேகானந்தன் தெரிவித்திருந்தார்.

## இராசி பலன்

(11- 21- 2002)

(ஐப்பசி 25, திங்கள்)

சப்தமி மாலை 6. 51வரை

திருவோணம் பி. இ 3. 12

இராகுகாலம்- 7. 36- 9. 06

நல்லநேரம்- 12. 06- 1. 36

அமிர்தசித்தம்

**மேஷம்**

உற்சாகமானநிலை, பிறர் உதவி, நல்ல செய்தி, சுப நிகழ்வு

**இடபம்**

பிரயாணம், கட்டுப்பாடு, உடல்நலக்குறைவு, முயற்சி தாமதம்

**மிதுனம்**

வாகனபயம், எதிர்பாராத பிரச்சினை, முயற்சி தாமதம், வீண்தொல்லை

**கடகம்**

கௌரவம், நண்பர்கள் சந்திப்பு, முயற்சி கைகூடும், போசனசுகம்

**சிங்கம்**

சகோதரர் உதவி, உடல் நலம், காரிய நன்மை, திடீர் பயணம்

**கன்னி**

மனக்குழப்பம், வியாபார நன்மை, உடல்நலக் குறைவு, காரிய தாமதம்

**துலாம்**

தாய்வழி உறவு, மாணவர் கல்வியில் ஆர்வம், தன்னம்பிக்கைக்குறைவு, நிலைக்கேடு

**விருச்சிகம்**

அந்நியர் சந்திப்பு, கூட்டு முயற்சி, பொருள் சேர்க்கை, வாக்கு மேன்மை

**தனுசு**

காரிய தாமதம், மாதர் நட்பு, பொருள் விரயம், அபகீர்த்தி

**மகரம்**

புதிய பொருள் சேர்க்கை, ஜனவசியம், பெரியோர் ஆசி, நல்ல முயற்சி

**கும்பம்**

பிரயாணக் கஷ்டம், பண விரயம், முயற்சி தாமதம், நித்திரைக் குழப்பம்

**மீனம்**

தொழில் சிந்தை, குடும்ப சுகம், காரிய தாமதம், தன வரவு

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது).

வளவன்

## யாழ்- வவுனியா- மட்டு. மாவட்ட தேசிய கல்வியியற் கல்லூரிகளில்
# 16ந்திகதி நேர்முகப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பு, மாவட்ட தேசிய கல்வியியற்கல்லூரிகளுக்கு, 2003ஆம் ஆண்டுக்கு மேலதிகமாக மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்காக, மூன்று கல்வியியற்கல்லூரிகளிலும் எதிர்வரும் 16ஆந் திகதி இரண்டாவதுநேர்முகப் பரீட்சை நடைபெறவுள்ளது.

மேற்படி கல்விஆண்டுக்கு மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளும் வகையில், கடந்த மாதம் 15ந் திகதி தொடக்கம் 31ந்திகதி வரை முதலாவது நேர்முகப்பரீட்சை நடைபெற்றது.

இதில் ஒதுக்கப்பட்ட எண்ணிக்கைக்கு ஏற்ப மாணவர்கள் தெரிவு செய்யப்படாததாலேயே, இரண்டாவது நேர்முகப் பரீட்சைக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்நேர்முகப் பரீட்சைக்கான அழைப்புக் கடிதங்கள் ஏற்கனவே அனுப்பப்பட்டுள்ளதாகவும், கடிதம் கிடைக்காவிடினும் பத்திரிகைகளில் பெயர் உள்ளவர்கள் உரிய ஆவணங்களுடன் நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிக்க முடியுமென்றும், முதலாவது நேர்முகப் பரீட்சைக்கு தோற்றாதவர்களும் இந்நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளிக்க முடியுமென்றும், யாழ். கல்வியியற்கல்லூரி பீடாதிபதி கலாநிதி தி. கமலநாதன் தெரிவித்துள்ளார்.

அத்துடன் கிறிஸ்தவபாடத் துறைக்கு விண்ணப்பித்தவர்கள் மாத்திரம் தேசிய மட்டச் சான்றிதழுடன் வவுனியா தேசியகல்வியியற்கல்லூரிக்கே நேர்முகப் பரீட்சைக்கு செல்ல வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது,

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட மாணவர்கள்மட்டக்களப்பு கல்வியியற்கல்லூரிக்கும், வவுனியா, திருகோணமலை, கொழும்பு, மன்னார் மாவட்ட மாணவர்கள் வவுனியா கல்வியியற்கல்லூரிக்கும், யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாணவர்கள் யாழ்ப்பாணம் கல்வியியற்கல்லூரிக்கும் நேர்முகப் பரீட்சைகு தோற்றவேண்டுமென்றும், தகுந்த காரணம் இருப்பின் கல்லூரிகளை மாற்றியும் நேர்முகப் பரீட்சைக்கு தோற்ற முடியுமென்றும் யாழ் கல்வியியற் கல் லூரி பீடாதிபதி மேலும் தெரிவித்துள்ளார்,

யாழ். மாவட்டத்திலிருந்து நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்களின் பெயர் விபரங்கள் 7ம்பக்கத்தில்.

(இ)

## களனிப் பல்கலை மாணவர் 7 பேர் பொலிசாரால் கைது

(கொழும்பு)

களனிப் பல்கலைக்கழக விடுதியை நேற்று அதிகாலை சுற்றிவளைத்தபொலிசார் அவ் விடுதியில் இருந்த 07மாணவர்களை சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர்.

ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக மாணவன் ஒருவன் மரணமானதை அடுத்து கிடைத்த தகவல்களின் அடிப்படையிலேயே இச்சுற்றிவளைப்பு தேடுதல் நடத்தப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் கோஷ்டி மோதலகளில் ஈடுபட்ட பகிடிவதையை ஆதரிக்கும் மாணவர்களுக்கும் இப் பல்கலை மாணவர்களுக்கும் இடையே தொடர்பு இருபபதாக பொலிஸார் சந்தேகிப்பதாகத் தெரிகின்றது.

(க-பி8)

### உடத்தலவின்ன முஸ்லிம் இளைஞர்படுகொலை
## சந்தேக நபர்களை நீதிமன்றில்ஆஜராகபணிப்பு

(கொழும்பு)

கடந்த வருடம் டிசம்பர் பொதுத்தேர்தல் தினத்தன்று கண்டி உடத்தலவின்ன என்னுமிடத்தில் பத்து முஸ்லிம் இளைஞர்களை கொலைசெய்த வழக்கின் சந்தேகநபர்கள் 15பேர்களையும் எதிர்வரும் வெள்ளிக்கிழமை 15ம்திகதி கொழும்பில் ஏற்படுத்தப்பட்டுளள ஜுரர்களற்றட்ரயல் அற்பார் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு கடந்த வெள்ளியன்று தெல்தெனிய மாஜிஸ்ரேட்இணோக்கா ரணசிங்க உத்தரவிட்டுள்ளார்.

இவர்களுள் பொதுஜன ஐக்கியமுன்னணி முக்கியஸ்தர் அனுருத்த ரத்வத்தவும் அவரின் இருபுதல்வர்கள் லோஹான், சாணுக்க ஆகியோரும் அடங்குகின்றனர்.

சந்தேக நபர்கள் வெள்ளிக்கிழமையன்று தெல்தெனிய மாஜஸ்திரேட் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட போது கொழும்புமேல் நீதிமன்றத்தில் ட்ரயல் அற் பார் விசாரணைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்றும் இவர்கள் மீதான குற்றச்சாட்டுக்கள் அங்கு விசாரிக்கப்படவுள்ளன என்றும் அரச சட்டத்தரணி அக்கலா வேங்கைப்புலி தெரிவித்தார்.

இதனையடுத்து மாஜிஸ்ரேட் அவர்களை எதிர்வரும் 15ம் திகதிகொழும்புமேல் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு உத்தரவிட்டார்.

## கடலோர பாதுகாப்பு: ஜப். இந்திய ஒப்பந்தம்

(புதுடில்லி)

இந்தியாவுக்கும் ஜப்பானுக்கும் இடையே கடலோரபாதுகாப்பை வலுப்படுத்துவதற்கான ஒப்பந்தம் விரைவில் கையெழுத்திடப்படவுள்ளது என இந்திய கடலோரகாவல் படைத்துணைத்தலைமை இயக்குநர் பி. பலேரி தெரிவித்துள்ளார்.

நேற்றையதினம் இந்திய, ஜப்பான் நாடுகளின் கடலோர காவல்படையின்கூட்டு ஒத்திகையினை நேரில் பார்வையிட்டபின்னர் செய்தியாளர்களிடம் பேசியஇவர், தெற்காசிய கடல்பகுதியில் பெருகிவரும் தீவிரவாதிகளின் நடமாட்டம், ஆயுதக்கடத்தல், கடற்கொள்ளைபோன்றவற்றைக் கட்டுப்படுத்த இந்த ஒப்பந்தம் பெரிதும வழிவகுக்கும என்று தெரிவித்துள்ளார்,

இதேவேளை ஆசிய பசுபிக் கடற்பகுதியில் இந்தோனேஷியாவிற்கு அடுத்தபடியாக இந்தியக் கடற்பகுதியில்தான் அதிகளவில் கடற்கொள்ளை, ஆயுதக்கடத்தல் போன்ற சம்பவங்கள் இடம்பெறுவது குறிப்பிடத்தக்கது, (பி-2)

### தாய்லாந்து பேச்சுக்களில்

# அரசு முன்வைத்த யோசனைகள் எவை?

## சுதந்திரக்கட்சி விபரம் கோருகிறது

(கொழும்பு)

தாய்லாந்தில் நடைபெற்ற இரண்டு சுற்றுப் பேச்சு வார்த்தைகளிலும் அரசாங்கம் முன்வைத்த ஆலோசனைகள் எவை என்பதைத் தமக்கு அறியத்தருமாறு பிரதமரைக் கோருவது என்று கொழும்பில் வெள்ளியன்று கூடிய ஸ்ரீ. ல. சு சுதந்திரக்கட்சியின் நிறைவேற்றுக்குழு தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

இத்தீர்மானத்தைக் கூட்டத்தில் பிரேரித்த கட்சியின் பொருளாளர் மங்கள சமரவீர, கடந்த பதினொருமாதங்களாக பிரதமரும் சில அமைச்சர்களும் விடுதலைப்புலிகளுடன் பல பேச்சுக்களை வைத்துக் கொண்டாலும் அவை பற்றி நாட்டு மக்களுக்கோ அல்லது ஜனாதிபதிக்கோ தெரிவிக்கவில்லை.

தாய்லாந்தின் பேச்சுக்களில் அரசாங்கம் முன் வைத்த யோசனைகள் என்ன என்பதை அரசாங் அறிவிக்கவேண்டும் என்றும் கூறினார்.

அத்துடன் வடக்கும் கிழக்கும் இணைக்கப்பட வேண்டுமா? என்பது பற்றி அம்மாகாண மக்கள் மத்தியில் தேர்தல் மூலம் அபிப்பிராயம் பெறப்படவேண்டும்; இணைக்கப்பட வேண்டும் என்று மக்கள் வாக்களித்தால் கிழக்குமாகாண முஸ்லிம்களுக்கு தனியான நிர்வாக அலகு ஏற்படுத்தப்பட வேண்டும்.

அத்துடன் சமாதானப் பேச்சுக்களின் முடிவுகள் அமுல் படுத்தப்படுவதற்கு முன்னர், விடுதலைப்புலிகளிடமிருந்து ஆயுதங்கள் களையப்பட வேண்டும். அவர்களைச் சமாதானமான ஜனநாயக நீரோட்டத்தினுள் கொண்டுவரப்பட வேண்டும் என்றும் சமரவீர மேலும் தெரிவித்தார்.

(இ)

### நாட்டைக் கட்டியெழுப்ப

# பிரதான கட்சிகள் இரண்டும் ஒன்றிணைய வேண்டும்

## அமைச்சர் இம்தியாஸ் விருப்பம்

(கொழும்பு)

இந் நாட்டில் நிரந்தர சமாதானத்துக்கும் சுபீட்சத்துக்குமான சூழ்நிலைஒன்றை ஐக்கியதேசிய முன்னணிஅரசு உருவாக்கிஉள்ளது என ஊடகத்துறை அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர்மாக்கார் பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

அரசின் இரண்டாவதுவரவு செலவுத்திட்டத்தின் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அமைச்சர் அங்குதொடர்ந்து பேசுகையில் இப்போது அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய ஆட்சிமுறை ஒன்றை ஏற்படுத்திக்கொள்வதற்கான காலம் கனிந்துள்ளது.

நாட்டை கட்டியெழுப்புவதற்கு இருபிரதான அரசியல் கட்சிகளான பொதுஜனஐக்கிய முன்னணியும் ஐக்கிய தேசிய முன்னணியும் ஒன்றிணையவேண்டும்.

இளைஞர் சமூகத்துக்கு சிறந்த எதிர்காலம் ஒன்றை அமைத்துக்கொடுப்பதே இவ்வரசின் முக்கியநோக்கமாகும்.

அபிவிருத்தி அடைந்தநாடுகளை முன் உதாரணங்களாக கொண்டு ஐக்கியதேசிய முன்னணி அரசு நாட்டை ஆட்சிசெய்து வருகிறது.

இருபிரதான எதிர்பார்ப்புகளை மனதில்கொண்டே மக்கள் இவ் அரசாங்கத்தை தெரிவுசெய்தார்கள் பொருளாதாரம் சமாதானம் ஆகிய இரண்டு அம்சங்களுமே மக்களின் இவ்எதிர்பார்ப்புக்கள் ஆகும்.

மக்களின் இவ் எதிர்ப்புக்களை நிறைவேற்ற அரசாங்கம் ஏற்கனவே பல நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

அரசின் முறையான நிதி முகாமைத்துவம் காரணமாக ரூபாவின் பெறுமதி வீழ்ச்சி அடையாமல் தடுக்க முடிந்தது எனவும் தெரிவித்துள்ளார்.

(க-பி8)

### வடக்கு- கிழக்கு அபிவிருத்திக்கான

# நிதியம் விரைவில் அமையும் தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு- கிழககு மாகாணங்களில் மேற்கொள்ளப்படவிருக்கும் அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வு புனரமைப்பு நடவடிக்கைகளுக்கான நிதியை கையாளுவதற்கும், கண்காணிப்பதற்கும் வடக்கு கிழக்கு அபிவிருத்தி நிதியம் ஒன்று உருவாக்கப்படவுள்ளது.

இத்தகவலை தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு. ப. தமிழ்ச்செல்வன் கிளிநொச்சி நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

சர்வதேச சமூகம் வடக்கு கிழக்கு மாகாண புனர்வாழ்வு அபிவிருத்தி மீள குடியேற்ற நடவடிக்கைகளுக்கு பெருமளவு நிதியை வழங்க உறுதியளித்துளளது.

அமைக்கப்படவுள்ள இந்நிதியத்தில் உதவி வழங்கும் சில நாடுகளின் உறுப்பினர்களும் அங்கம் வகிக்கவுளளனர்.

இந்நிதியத்தின் ஊடாகவே வடககு கிழககு மாகாணங்களின் அபிவிருத்திக்குரிய நிதி வழங்கப்படவுளளது.

(க- பி- 08)

### ஸ்ரீ ஜெயவர்த்தன பல்கலைக்கழக

# மாணவன் இறப்பிற்கு அடி காயமே காரணம்

(கொழும்பு)

ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைககழகத்தில் மாணவர் குழுக்களுக்கிடையே இடம்பெற்ற மோதலினால் மரணமான மாணவனின் தலையில் ஏற்பட்ட அடிகாயங்களால் அம்மாணவனின் மூளை பாதிக்கப்பட்டு அவர் இறந்ததாக பிரேத பரிசோதனை அறிக்கை தெரிவித்துள்ளது.

பகிடிவதை காரணமாக இரு மாணவக் குழுக்களிடையே கடந்த வெள்ளிக் கிழமை கோஷ்டி மோதல் நடைபெற்றது.

இதேவேளை பல்கலைக் கழகங்களுக்கிடையே மாணவர் மோதல் அதிகரித்து வருவதற்கு கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு கண்டனம் தெரிவித்துள்ளார்.

(க-பி-8)

## ஒப்பனைக் கலைஞர் கைது

(கொழும்பு)

நீண்ட தூரத்துக்கு குறி பார்த்து சுடக்கூடிய சினைப்பர்ரக துப்பாக்கி ஒன்றை வைத்திருந்த ஒப்பனைக்கலைஞர் ஒருவரை கொழும்பு கிராண்பாஸ்பொலிஸார்கைது செய்துள்ளனர்.

சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட இருவரிடமிருந்து கிடைத்த தகவலை அடுத்து, கலைஞரின் ராகனம் பட்டுவத்த பகுதியில் உள்ள வீட்டில்இருந்து இத்துப்பாக்கி கண்டுபிடிக்கப்பட்டது. (க-8

## விபத்தில் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் கே.கே.எஸ். வீதியில் நேற்றுக் காலை 8 30 மணியளவில் இராணுவ வாகனம் ஒன்றுடன் ஏற்பட்ட விபத்தில்நபர் ஒருவர்படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஆனைக் கோட்டையிலிருந்து இவர் மோட்டார்சைக்கிளில் சென்ற போதே இவ்விபத்து இடம் பெற்றது

கருணாகரசிங்கம் (வயது -54) என்பவரே படுகாயம் அடைந்தவராவார்.

(க-பி-07-16)

### பிரபாவுக்கு எதிரான

# நீதிமன்றதீர்ப்பைகண்டித்து கல்முனையிலும் பேரணி

(அம்பாறை)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே பிரபாகரனிற்கு கொழும்பு மேல் நீதிமன்றம் விதித்துள்ள 200 வருட கடுழிய சிறைத் தண்டனையை ஆட்சேபித்து கல்முனைப் பகுதியில் நாளை செவ்வாய்க்கிழமை மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி நடைபெறவுள்ளது.

இவ்வாறு கல்முனைப் பிரதேச வெகுஜன ஒன்றிய பிரதிநிதி எஸ் துஷ்யந்தன் தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை 8 ஆம் திகதி யாழ்ப்பாணம், வவுனியா, முல்லைத்தீவு ஆகிய பகுதிகளில் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனிற்கு விதித்துள்ள தண்டனையை கண்டித்து பெரும் ஆர்ப்பாட்டப் பேரணிகள் நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

(க-பி10)

### யாழ். வைத்தியர்களுக்கு

# வினைத்திறன் பரீட்சை 40பேர் தோற்றினர்

(யாழ்ப்பாணம்(

யாழ்குடாநாட்டைச் சேர்ந்த 40வைத்திய அதிகாரிகளும் பல்வைத்தியர்களும் நேற்று வினைத்திறன் காண் பரீட்சைக்கு தோற்றினர்.

யாழ் தாதியர் பயிற்சிக்கல்லூரியில் நேற்றுக்காலை 9 00 மணிமுதல் பிற்பகல் 3 30மணிவரை இப்பரீட்சை இடம்பெற்றது.

மேற்படி பரீட்சைகடந்த 2001ம் ஆண்டு நடைபெற வேண்டிய ஒன்று என்றும் தவிர்க்க முடியாத காரணத்தால் தாமதமடைந்தது என்றும் யாழ்ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

(க-9)

# நிதி நிலைவர அறிக்கை ஜூன்மாதம் வெளியாகும்

(கொழும்பு)

நாட்டின்நிதி நிலைவரங்கள் தொடர்பான விபரங்களை அடுத்த வருடத்தின் நடுப் பகுதியில் வெளியிட ஐக்கிய தேசிய முன்னணி அரசு தீர்மானித்துள்ளது.

இவ்வறிக்கை எதிர்வரும் ஜூன்மாதம், அல்லது வரவு செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்பட்டு 6 மாதத்தின் பின்னர் சமர்ப்பிக்கப்படும் என நிதி அமைச்சர் கே. என். சொக்ஸி தெரிவித்துள்ளார்.

நாட்டின் நிதிநிலைமைகள் தொடர்பாக மக்களுக்கு அறிவிக்கப்பட்ட பின்பே அது பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளது;

நாட்டின் நிதிநிலைமை குறித்து பொதுமக்கள் அறிந்துகொளவதற்கு அது குறித்து ஆராய்வதற்கும் வாய்ப்பை ஏற்படுத்தும் நோக்கிலேயே இந்த திட்டத்தை அரசாங்கம் முன்னெடுத்துள்ளது;

இந்நிதி அறிக்கையில் வருடத்தின்முதல் 4மாதங்களுக்குரிய நிதிதிட்டங்கள்வருமானங்கள் மற்றும் செலவுகள் தொடர்பான விபரங்கள் உள்ளடக்கப்படும்.

இதேவேளை இந்தத்திட்டத்தை அமுல்படுத்தும் பொருட்டு புதிய சட்டமூலம் ஒன்றைநிதியமைச்சர்பாராளுமன்றத்தில் சமர்ப்பித்துள்ளார்.

நிதி அமைச்சுக்கான நிதி ஒதுக்கீட்டு விவாதத்தின் போது இந்த சட்டமூலம் கவனத்தில் கொள்ளப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

(க-பி08)


## புளக் தயாரிப்பதற்கு தேவையான பொருட்கள் விற்பனைக்குண்டு

★ சின் சீற் (Zine Sheet)

★ கமரா

★ இரசாயனப் பொருட்கள்

★ Litho Film

தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி :

**வலம்புரி**

இல. 15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

# இலங்கை வங்கி இரண்டாம் கிளை

## யாழ்ப்பாணம்

ලංකා බැංකුව BANK OF CEYLON இலங்கை வங்கி



# வெள்ளி விழா

## 11-11-2002 (திங்கட்கிழமை)

11.11.2002 இன்று தனது 25 ஆவது ஆண்டு நிறைவையொட்டி வெள்ளி விழாக் கொண்டாடும் இலங்கை வங்கியின் இரண்டாம் கிளையானது, வாடிக்கையாளரின் ஆசியை வேண்டி நிற்பதோடு, மேலும் வளர்ச்சி பெற அவர்களது ஆதரவையும் வேண்டிநிற்கிறது.

**வாடிக்கையாளரின் நன்மை கருதி, சில தினங்களில்**

*வங்கியின் செயற்பாடுகள் அனைத்தும் கணனி மயம்
*தங்க நகை அடைவு வசதி
*வெளிநாட்டு நாணயக் கணக்கு விஸ்தரிப்பு
* A.T.M காட் வசதி

என்பவற்றை வாடிக்கையாளர்களுக்கு அளிக்க உள்ளனர்.

இவ்வைபவத்தில், உதவிப் பொது முகாமையாளராக (A.G.M) பதவி உயர்வு பெற்று எமது வலயத்தை இன்று பொறுப்பேற்கும் திரு.க.பாலசுப்பிரமணியம் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பிக்கிறார்.

இக்கிளையின் வெற்றிக்காக அயராது உழைத்த அனைத்து மூத்த ஊழியர்களுக்கு நாம் கௌரவத்துடன் நன்றி கூறுவதுடன் இவ் விழாவில் கலந்து சிறப்பிக்குமாறும் வேண்டுகின்றோம்.

***வாழ வளர வாழ்த்தும் வாடிக்கையாளர்கள்:-***

| | | | |
|---|---|---|---|
| RAVI AND RAJ SILKS<br>77,Power House Road,<br>Jaffna. | ALDI ELECTRONICS<br>15 , Stanley Road,<br>Jaffna. | RAVI MOTORS<br>52, Stanley Road,<br>Jaffna. | M/S VIJITHA TEX<br>109,Grand Bazaar,<br>Jaffna. |
| JEYANTHA TEXTILES<br>24 B,New Market,<br>Grand Bazaar,<br>Jaffna. | M/S V.S.B. GROUP<br>275 & 277, Stanley Road,<br>Jaffna. | A.S. ARUMUGAM & SONS<br>81, Stanley Road,<br>Jaffna. | M/S. ARUL VINAYAGAR TRADERS<br>108, Stanley Road ,<br>Jaffna. |
| M/S. VENKADESWARA<br>79,Kasthuriyar Road,<br>Jaffna. | PIRABA PHARMACY<br>57, Stanley Road,<br>Jaffna. | YASO ARTS PLASTIC<br>35, Kannathiddy Road,<br>Jaffna. | V. V. T. LIQUEUR BAR<br>Valvettiturai. |
| SRI GANESH STORES<br>453,K.K.S. Road,<br>Jaffna. | M/S MAHANATHY TEX<br>16 , New Market,<br>Jaffna. | M/S KUMARASAMY TEXTILES<br>42, 44, Grand Bazaar,<br>Jaffna. | USHA AGENCY<br>145, Stanley Road,<br>Jaffna. |
| K.VAITHILINGAM & CO<br>38,Stanley Road,<br>Jaffna. | KARSON ELECTRICALS<br>4(14) , Stanley Road,<br>Jaffna. | M/S UMA FANCY PALACE<br>25,30, Model Market,<br>Jaffna. | EASON WHOLE SALE CENTRE<br>63, Point Pedro Road,<br>Anaipanthy, Jaffna. |

| | | |
|---|---|---|
| PARAGON DIESEL ENGINEERS<br>70,Arasady Road,<br>Jaffna. | M/S ZENITH MARKETING & ADVERTISING SYSTEMS<br>19/3, Colombagam .Road,<br>Chundikuli, Jaffna. | CHRISTY CONSTRUCTION<br>(Engineers & Constructors)<br>93, Main Street,<br>Jaffna. |

இலங்கை வங்கி
2ஆம் கிளை,
யாழ்ப்பாணம்.

முகாமையாளரும், ஊழியர்களும்.

# இன்று ஒரு தகவல்

## மனித மூளையும் மாபெரும் இயற்கையும்

சாலமோன் என்பவர் ஒரு மிகப்பெரிய ஞானி. அவருக்கு ஒரு சந்தேகம் வந்தது, இந்த உலகத்திலே நல்லவன் கஷ்டப்படுகிறான், கெட்டவன் சந்தோஷமாக இருக்கிறான். இது ஏன்? சிலரிடம் செல்வம், நிறைய இருக்கின்றது, ஆனால் குழந்தை இல்லை, சிலர் சாப்பாட்டுக்கே சங்கடப்பட்டுக்கொண்டுஇருக்கிறார்கள், ஆனால் அவர்களுக்கு ஏகப்பட்ட குழந்தைகள பிறந்து விடுகின்றன இது ஏன்? இது கடவுள் செயல் என்று சிலர் சொல்லலாம், அப்படியென்றால் இந்தச் செயல் நியாயமா? சரி! இது சாத்தானுடைய செயல் என்று சிலர் சொல்லலாம், அப்படியென்றால் கடவுள் சக்திக்கு மீறியும் சில செயல்கள் நடக்க முடியுமா? இப்படி அவருக்குச் சந்தேகம்;

சாலமோன் யோசித்து, யோசித்துப் பார்த்தார், ஒன்றும் புரியவில்லை. பலநாட்கள் சிந்தித்துப் பார்த்தார், ஒன்றும் விளங்கவில்லை, வீட்டுக்குள் இருந்து யோசித்துப் பார்த்தார், கடற்கரைக்குப் போய் தண்ணீர் ஓரமாக நடந்து பார்த்தார், ஒன்றும் பிரயோசனம் இல்லை, விடை கிடைக்கவில்லை, சாலமோன் ஞானி தன் முயற்சியைக் கைவிடவில்லை. எப்படியும் இதற்கு விடை கண்டு பிடித்தே தீருவேன் என்று கங்கணம் கட்டிக் கொண்டார்.

காலையில் எழுந்திருக்க வேண்டியது. கடற்கரைக்குப் போகவேண்டியது, யோசிக்க வேண்டியது, மாலையில் வீட்டுக்கு வரவேண்டியது, தினமும் இப்படியே செய்து கொண்டிருந்தார். ஒரு நாள் கடற்கரையிலே நடந்து கொண்டிருந்த போது ஒரு சின்னப்பையன் கொட்டாங்குச்சி ஒன்றைவைத்துக் கொண்டு விளையாடிக் கொண்டிருந்ததைப் பார்த்தார், எப்படி?

கடல் தண்ணீரை கொட்டாங்குச் குச்சியால் எடுத்துக் கரையில் ஊற்றிக் கொண்டிருந்தான். காலையில் அந்த வழியாகப் போகும் போது இதைப் பார்த்தார். மாலையில் திரும்பி வருகின்ற பொழுதும் அந்தப் பையன் அதே வேலையைச் செய்துகொண்டிருந்தான். ஞானிக்குச் சந்தேகம் அந்தப் பையனைக் கூப்பிட்டார். விசாரித்தார். தம்பி! இருட்டிப் போய் விட்டது வீட்டுக்கு போகவில்லையா? என்று கேட்டார்.

அதற்கு அந்தப் பையன் 'உங்கள் வேலை முடிந்து போய் விட்டது போல் இருக்கிறது அது தான் வீட்டுக்குப் போகிறீர்கள். என் வேலை இன்னமும் முடிய வில்லை! அதை முடித்து விட்டுத் தான் வீட்டுக்குப் போவேன் என்றான்.

தம்பி அது என்ன வேலை என்று கேட்டார் ஞானி அதற்கு அவன் 'இந்தக் கடல் தண்ணீர் பூராவையும் இந்தக் கொட்டாங் குச்சியால் இறைத்து கரையில் ஊற்றுகின்ற வேலை என்றன் ஞானி ஆச்சரியப்பட்டார். சிரித்தார்! தம்பி! நீ எவ்வளவு? கடல் தண்ணீர் எவ்வளவு? உன்கையில் இருக்கிற கொட்டங்குச்சி எவ்வளவு? இதை வைத்துக் கொண்டு அதை எப்படி இறைக்க முடியும்? என்று கேட்டார்.

அந்தப் பையன் 'நீங்கள் எவ்வளவு? இந்த இயற்கை எவ்வளவு? உங்கள் மூளை எவ்வளவு? இதை வைத்துக் கொண்டு அதை அளந்துவிட முடியும் என்றால், நான் இந்தக் கொட்டாங்குச்சியை வைத்துக் கொண்டு கடல் தண்ணீரை இறைத்துவிட முடியாதா? நீங்களும் முயற்சி பண்ணுங்கள்! நானும் முயற்சி பண்ணுகிறேன்' என்று சொல்லிவிட்டு ஓடிப் போய்விட்டான். மறுபடியும் தண்ணீர் இறைக்க ஆரம்பித்து விட்டான். சாலமோன் ஞானிக்கு விடைகிடைத்து விட்டது.

என்ன விடைகிடைத்தது? மனிதன் தன் மூளையைக் கொண்டு இயற்கையின் செயல்களை அளக்க முயற்சிப்பது கொட்டாங்குச்சியைக் கொண்டு கடல் தண்ணீரை இறைப்பதற்கு முயற்சி பண்ணுவது மாதிரி! ஞானிக்கு ஐயம் மறைந்தது; அதே வினாடி சிறுவனும் மறைந்து விட்டான். இதிலிருந்து என்ன தெரிகிறது?

இயற்கையின் பல செயல்களுக்கு மனிதனால் இன்னமும அர்த்தம் கண்டுபிடிக்க முடியவில்லை. ஒரு சிறிய உதாரணம்! நமது ஊரில் ஒரு ஞானி இருந்தார். அவரிடம் ஒருவன் வந்து 'ஐயா! எனக்குப் புத்திர பாக்கியமே இல்லை. ஏதாவது வழிசொல்லுங்கள்' என்று கேட்டான். அதற்கு அவர் 'ராமேஸ்வரத்துக்குப் போய்விட்டுவா ... குழந்தை பிறக்கும்' என்று சொன்னார். அதற்கு அவன் என் சொந்த ஊரே ராமேஸ்வரம் தான் என்று சொன்னான்.

தென்கச்சிகோ. சுவாமிநாதன்

## பாதிப்புற்ற அரசாங்க ஊழியர்க்கு நஷ்டஈடு

(கொழும்பு)

கிளிநொச்சி, முல்லைத்தீவு, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் போர்ச்சூழல் காரணமாக பாதிக்கப்பட்ட அரச ஊழியர்களுக்கு 89 இலட்ச ரூபா நஷ்டஈடாக வழங்கப் படவுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள அரச ஊழியர்கள் 34 பேருக்கு 29 இலட்சத்து 41 ஆயிரத்து 750 ரூபாவும்,

முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள 36 பேருக்கு 29 இலட்சத்து 30 ஆயிரத்து 565 ரூபாவு .

யாழ். மாவட்டத்தில் உள்ள 31 பேருக்கு 30 இலட்சத்து 39 ஆயிரத்து 512 ரூபாவும் வழங்கப்படவுள்ளதாக புனர்வாழ்வு அகதிகள் மற்றும் மீளக்குடியமர்த்தல் அமைச்சு அறிவித்துள்ளது.

இந்நஷ்ட ஈட்டுத் தொகைக்கான காசோலையைகையளிக்கும் நிகழ்வு வவுனியா மாவட்டச் செயலகத்தில் நடைபெறவுள்ளது. (உ-8)

## கிராமியக்குழு

(சண்டிலிப்பாய்)

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் நா. வேதநாயகனின் பணிப்பிற்கமைய கிராமிய குழு ஒன்று இன்று நண்பகல் 12.00மணிக்கு, மகாத்மா சன சமூகநிலையத்தில்அங்குரார்ப்பணம் செய்யப்படவுள்ளது; (க-258)

# பல்கலை மாணவர் விவகாரம்

# பாராளுமன்றில் கூச்சல் குழப்பம்

(கொழும்பு)

பாராளுமன்றம் நேற்றுமுன்தினம் கூடிய போது அங்கு சுமார் 15 நிமிடங்கள் கூச்சல் குழப்பங்கள் நிலவியது.

சமுர்த்தி அமைச்சர் எழுப்பிய ஒழுங்கு பிரச்சினையை அடுத்தே அங்கு கூச்சல் குழப்பம் ஏற்பட்டுள்ளது.

ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற மோதலில் காயமடைந்த மாணவன் உயிரிழந்ததை சமுர்த்தி அமைச்சர், சபாநாயகர் யோசப் மைக்கல் பெரேராவின் கவனத்துக்கு கொண்டுவந்தார்.

அந்த [illegible]தனை தேசிய பிரச்சினையாக கருதி விவாதம் நடத்தப்படவேண்டும் எனவும் அவர் அங்கு வேண்டுகோள் விடுத்தார்.

இது தொடர்பில் ஆளும் கட்சி, எதிர்க்கட்சியாகிய இருதரப்பு பாராளுமன்ற உறுப்பினர்களும் ஒரே நேரத்தில் கருத்துக்களை தெரிவிக்க முயன்றதை அடுத்து சபையில் குழப்பம் ஏற்பட்டது.

இதேவேளை ஆளும் கட்சி பாராளுமன்றஉறுப்பினர் ஒருவர் இம்மாணவனின் மரணம் தொடர்பாக பாராளுமன்றில் அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும் எனக் கேட்டுக் கொண்டதற்கு, நிலையியற் சட்டத்தின் கீழ் இவ்வாறாக அறிக்கைகளை மன்றில் சமர்ப்பிக்க முடியாது என உறுப்பினரின் கோரிக்கையை சபாநாயகர் நிராகரித்து விட்டார் இதனால் ஆளும் கட்சி உறுப்பினர்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்;

இத்தகைய யோசனைகளை தமக்கு முன் கூட்டியே அறிவிப்பதன் மூலமே, சபையில் விவாதத்திற்கு இடமளிக்க முடியும் எனவும்,

சபாநாயகர்கவனம் செலுத்தாத விடயங்களை 20 பாராளுமன்ற உறுப்பினர் ஒரே நேரத்தில் சபையின் கவனத்துக்கு கொண்டுவர முடியும் எனவும் சபாநாயகர் சுட்டிக் காட்டினார்; (உ-8)

## டெங்கு ஒழிப்பு கருத்தரங்கு

(சண்டிலிப்பாய்)

சாவல்கட்டுக் கிராமத்தில் டெங்கு ஒழிப்புக் கருத்தரங்கு ஒன்று இன்று மு. ப. 11. 00 மணிக்கு மகாத்மா சனசமூக நிலையத்தில் நடைபெறவுள்ளது.

சுகாதாரப் பிரிவினரின் ஏற்பாட்டில் இக்கருத்தரங்கு நடைபெறவுள்ளது; (க-பி-258)

## நாட்டு மக்களுக்கு ஜனாதிபதி உரையாற்றுவார்

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா ஜனாதிபதியாகப் பதவி ஏற்று எட்டு ஆண்டுகள் பூர்த்தியாவதை முன்னிட்டு நாளை செவ்வாய்க்கிழமை ஜனாதிபதி செயலகத்தின் முன்பாக விசேட நிகழ்ச்சி ஒன்று நடைபெறவுள்ளது.

இவ் வைபவத்தின் போது அரசாங்கத்தினது சமாதான முயற்சிகள் குறித்தும், அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்தும் சுமார் 15 நிமிடங்கள் வரை ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு உரையாற்றவுள்ளார் எனறு ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது. (ம-பி)

## கணனி பயிற்சி சான்றிதழ்கள்

(சண்டிலிபபாய்)

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்தின் திறனவிருத்தி மையத்தில் கணனிப் பயிற்சி நிலைய சான்றிதழ் வழங்கும் வைபவம் சனிக்கிழமை மு.ப. 9.00 மணியளவில் அகதிகள் புனர்வாழ்வு நிறுவன தலைவர் அ. நல்லதம்பி தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சண்டிலிப்பாய் பிரதேச செயலர் நா. வேதநாயகன், கௌரவ விருந்தினராக சிறுவர் பாதுகாப்பு நிதிய யாழ். மாவட்ட இணைப்பாளர் டாக்டர் அலஸ்லைர் கிரீக், கலந்து கொண்டார்,

கணனி மற்றும் தட்டச்சு சுருக்கெழுத்து ஆகிய பயிற்சிகள் மேற்கொண்ட 25 பேருக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. (க-பி-258)

## பொதுச் சந்தை இயங்கும்

(திருநெல்வேலி)

வடமராட்சி கிழக்கில் விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள மாமுனை பொதுச் சந்தை எதிர்வரும் 16 ஆம் திகதி சனிக்கிழமை முதல் மீளவும் இயங்கவுள்ளது;

கடந்தகால யுத்த சூழ்நிலை காரணமாக இச்சந்தை இயங்காமல் இருந்தது இங்கு குறிப்பிடத்தக்கது; (க-பி-43)

## சர்வதேச பௌத்த நிலைய அடிக்கல் நாட்டல்

(கொழும்பு)

கண்டியில் அமைக்கப்படவுள்ள சர்வதேச பௌத்த நிலையத்திற்கு பிரதமர்ரணில் விக்கிரமசிங்கவும் தாய்லாந்து வெளிவிவகார அமைச்சர் கரசியார்ட் சத்திரத்தாயும் கூட்டாக அடிக்கல் நாட்டவுள்ளனர்.

இந் நிகழ்வு எதிர்வரும் 16 ஆம் திகதி நடைபெறவுள்ளது:

சியாமொலிமகா நிக்காயா பௌத்த நிலையத்தின் 25-வது வருடப் பூர்த்தியை குறிக்கும் முகமாகவே சர்வதேச பௌத்த நிலையத்தை இலங்கையும், தாய்லாந்தும் சேர்ந்து கூட்டாகஉருவாக்கவுள்ளனர்.

இதேவேளை தாய்லாந்து சர்வ தேச பௌத்த நிலைய நிர்மாணப் பணிகளுக்கு அமெரிக்கா 2 மில்லியன் டொலர்களை வழங்குகிறது. (உ-3)

## வர்த்தக நிலையங்கள்மீது பரிசோதகர்குழு பாய்ச்சல்

(சுதுமலை)

கொக்குவில் பொதுச்சுகாதாரப் பரிசோதகர் பிரிவில் உள்ள கொக்குவில், மற்றும் குளப்பிட்டி போன்ற பகுதிகளில் உள்ள வர்த்தக நிலையங்கள், மற்றும் உணவுச் சாலைகள், தேநீர்கடைகள் என்பனகடந்தவாரம்பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

சில வர்த்தகநிலையங்களில் காலவதி திகதி முடிவடைந்த பிஸ்கட்வகைகள் மற்றும்உணவுப்பொருட்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டிருப்பது கண்டு பிடிக்கப்பட்டதுடன் விரைவில் அவர்களிற்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்பட உள்ளதாகவும் அறியப்படுகின்றது. மேலும் உணவுச் சாலைகள், தேநீர்கடைகள் என்பன பரிசோதிக்கப்பட்டு குறைபாடுகள் நிவர்த்திசெய்வதற்கு கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது, (க-252)

## பேச்சுவார்த்தை குறித்து இந்தியாவுக்கு விளக்கம்

(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையே தாய்லாந்தில் நடைபெற்றுவரும் பேச்சுவார்த்தைகளின் முன்னேற்றம் தொடர்பாக நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜோன்பீற்றர்ஸன் இந்திய அரசாங்கத்துச்கு நேற்று முன்தினம் விளக்கியுள்ளார்.

சமாதான முயற்சிகள் தொடர்பாக இந்தியாவுக்கு விளக்கமளிப்பதற்காக கடந்த வெள்ளிக்கிழமை அங்கு சென்ற பீற்றர்ஸன் இந்தியத் துணைப் பிரதமர் எல். கே. அத்வானி, தேசியப்பாதுகாப்பு ஆலோசகர் பர்தேஷ் மிஸ்ரா, இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் யஸ்வந்சிங்க ஆகியோரை சந்தித்து உரையாடியபோதே நோர்வே வெளிவிவகார அமைச்சர் இதனை தெரிவித்துள்ளார்.

நாட்டில் தற்போது நடைபெற்றுவரும் பேச்சுவார்த்தைகள் தொடர்பாக இந்திய அரசுக்கு விளக்கமளிக்கும் வகையில், தாய்லாந்தில் நடைபெற்று முடிந்த முதலாம் சுற்று முதலாம் கட்ட பேச்சுவார்த்தைகள் தொடர்பாகவும் விளக்கமளிக்கப்பட்டுள்ளது; (க-பி-08)

## வடமராட்சி கிழக்கிற்கு தனியான சங்கம் அமைப்பு

(கொழும்பு)

வடமராட்சி கிழக்கில் உள்ள கள்ளுத்தவறணைகளுக்கு என தனியான பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கத்தினை அமைக்கும் முயற்சிகளில் இப்பகுதி சீவல் தொழிலாளர்கள் முனைப்புடன் ஈடுபட்டு வருகின்றனர்;

இப்பகுதியில் உள்ள கள்ளுத்தவறணைகள் பருத்தித்துறை மற்றும்பளை பனைதென்னை வள கூட்டுறவுச் சங்கங்களின் கட்டுப்பாட்டில் இருந்து வருகின்றன.

ஆனால் இந்த இரண்டு தலைமைச் செயலகங்களும் வடமராட்சி கிழக்கு சீவல் தொழிலாளர்களின் நலனில் அக்கறை காட்டுவதில்லை என்று கூறப்படுகின்றது.

இதனாலேயே இப்பிரதேச மக்கள் தமக்கென தனியான சங்கத்தை அமைக்கும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர். (க-43)

## கைநாடி...

அக்கணமே மந்திரி ஜி. ஜி பொன்னம்பலம் சகிதம் அரச பாதுகாப்புடன் வைத்தியரிடம்வந்து அவரால் கைநாடிபார்க்கப் பெற்று நோய் தீர்க்கப்பண்ணிய பெருமை இணுவையம் பதியின் சரித்திரத்தில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கப்படவேண்டியதொன்றாகும்.

எல்லா வைத்தியர்களும் வைத்தியம்என்ற சொல்லுக்கு அடிமையானவர்கள் ஆனால் செல்லப்பா கந்தையா அவர்களுக்கு வைத்தியம்என்ற சொல் கட்டுப்பட்டு அடிமையானது என்று ஒரு பண்ணிசைத் திருமுறை ஓதுவாரும் கந்தபுராண உரையாசிரியருமான கந்தையா ராசேந்திரம் என்பவர் கூறினார்.

ஓய்வுபெற்ற நீதிபதி புலவர் திருநாவுக்கரசு 'மேலைத்தேய வைத்திய முறையின் பிரகாரம் ஒரு நோயாளியின் பல்வேறு விதமான நோய்களுள் ஒரு நோயாளியை 'ரெலஸ்கோப் மூலமும் தற்காலத்தில் எக்ஸ்றே கருவி மூலமும் அறிந்தபோதும், அறியாமல் இருப்பதும் உண்டு மேற்படி வைத்தியர் கைநாடி மூலம் நோயை நாடி அறிந்து எந்த நிலையில் நோய் ஆரம்பித்தது; தற்போது நோயின் கேந்திரஸ்தானம் இன்னது என்றும், அதற்கு ஆலோசனை இன்னது என்றும் சொல்லுவார். ஒப்பரேசன் செய்யத் தேவையில்லையென்றால் எண்ணெய், மருந்து தேவை என்னும் நிலையில் கொடுப்பார்; மருந்தோ, எண்ணையோ தேவையில்லையென்றால் ஆலோசனை பத்திய பாகங்களான உணவுகளை உண்ணவும், இன்னோரன்ன உடனடியாக அனுஷ்டிக்க வேண்டியவற்றை அனுஷ்டிக்கவும், தவிர்க்க வேண்டியவற்றைத் தவிர்க்கும்படியும் சொல்லுவார் என்று கூறியுள்ளார்.

### பொலிஸ் உத்தியோகத்தரைத் தேற்றினார்

ஒரு பொலிஸ் உத்தியோகத்தர் திருமணம் நடந்து ஐந்து நாட்களில் பாணந்துறை பொலிஸ் நிலையத்திற்குக் கடமையாற்றச் சென்றார். பொலிஸ் உத்தியோகத்தருக்கு போதிய லீவுகள் எளிதில் கொடுக்கப்படுவது கடினம். பதினைந்து மாதங்கள் கடந்தன. வீட்டுக்கு வந்தார். மூன்று நாட்களில் அவர் கடமைக்குச் செல்ல வேண்டியவராக இருந்தபோதும் மனித வாழ்வுக்கு உட்பட்டவராகிய அன்னாருக்கு மிகச்சோதனையான காலம். மனையாள் உடற் பலவீனம் காரணமாக யாழ் ஆஸ்பத்திரிக்கு உடனடியாக எடுத்துச் செல்லப்பட்டார். அங்கே மருத்துவப் பணிகள் செவ்வனே செய்யப் பெற்றபோதும் மிகக்கடுமையான நோயாக இருந்தபடியால் வீட்டிற்குக் கொண்டு செல்லுங்கள் என்று பணிக்கப்பட்டார். வீட்டிற்குக் கொண்டு சென்றும் மேலும் இரண்டு நாள் மிக மோசமாக நோயால் பாதிக்கப்பட்ட நிலை. அயலவர் ஆகிய முருகர் அவர்களுக்கு உதவி செய்யும் முகமாக எமது வைத்தியரிடம் காரில் கூட்டி வந்தார். வைத்தியர் மேற்குறிப்பிட்ட நோயாளி வருவதை அம்பாள் அருளால் உணர்ந்து, தனது சோதரரை அழைத்து, நீல நிறக் காரில் நோயாளி ஒருவர் வருகிறார். நோயாளி காரில் இருக்கட்டும். அவவின் கணவரை உள்வரும்படி கூறுமாறு பணித்தார். அப்படியே சற்று நேரத்தில் நீலக்கார் வந்ததும், சோதரர் கணவரை மாத்திரம் உள் அழைத்து வந்தார். வைத்தியர் அவரைத் தேற்றினார். இத்தகு திறமைகள் வாய்ந்தவர் வைத்தியர்;

ஐக்கிய தேசிய முன்னணி அரசு

# யுத்தத்தை தொடர முடியாத நிலையில் சமாதானப்பேச்சிற்கு முன்வந்துள்ளது!

## வரவு செலவுத்திட்டத்திலும் ஒன்றுமே இல்லை

(யாழ்ப்பாணம்)

யுத்தத்தை நடாத்திய பேரினவாதக் கட்சியினர் தொடர்ந்து யுத்தத்தை நடாத்த முடியாத நிலையிலேயே சமாதானப் பேச்சிற்கு முன்வந்தனர்.

புதிய ஜனநாயகக் கட்சியின் பொதுச் செயலாளர் கா. செந்திவேல் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

புதிய ஜனநாயகக் கட்சியின் 4 வது தேசிய மாநாட்டை ஒட்டிய பொதுக் கூட்டம் யாழ். சிற்றிஹோல் மண்டபத்தில் கட்சியின் வடபிரதேச செயலாளர் தோழர் கா. கதிர்காமநாதன் தலைமையில் நடைபெற்ற வேளையிலேயே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்;

அவர் மேலும் தெரிவிக்கையில்;

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் பதவிக்கு வந்து பதினொரு மாதங்கள் ஆகின்றன. இந்தபதினொரு மாதங்களில் அல்லது அதற்கு முன்பு நடைபெற்ற தேர்தலிலே ரணில் விக்ரகிம சிங்கா முன்வைத்த கோரிக்கை இந் நாட்டிற் சமாதானம் கொண்டுவரப்பட வேண்டும் என்பதும் விடுதலைப் புலிகளோடு பேச வேண்டும் என்பது தான்,

இது ஒரு புதிய விடயமல்ல 1994 ம் ஆண்டு சந்திரிகா அம்மையார் இதேபோன்ற கோரிக்கையை முன்வைத்துத் தான் பாராளுமன்றத்தில் வெற்றிபெற்றது மட்டுமல்ல அதை தொடர்ந்து நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் 62 வீதம் அமோக ஆதரவை சிங்கள மக்களிடம் இருந்து பெற்று ஆட்சி அமைத்தார்.

### சமாதானத் தூதுவரா?

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது;

இப்பொழுது ஐ. தே. கட்சி அதரவாளர்கள் ஏதோ ரணில் விக்ரம சிங்கா வானத்தில் இருந்து வந்த சமாதானதூதுவன் போல்காட்ட முனைகிறார்கள் மக்களின் அபிலாசைகளைஇவர் கொஞ்சம் நீண்ட நாட்கள் நிலைக்க வைத்துள்ளார். அவ் வளவுதான்.

சமாதானம் என்பது ஒரு பக்கம் இருக்க மறுபக்கம் தனியார் மயப்படுத்தல், உலக மயப்படுத்தல் போன்ற விடயங்கள் இடம்பெற்றுவருவதை நாம் உணர்கின்றோம்.

வரவு - செலவுத்திட்டத்தை சமர்ப்பித்துள்ள அரசாங்கம் வரவு, செலவுத்திட்டத்தால் மக்களுக்கு எதுவுமே செய்யவில்லை. பாதுகாப்பு செலவினம் குறைந்தபாடில்லை.

அன்றாடம் உட்கொள்ளும் வறிய மக்களின் உணவான பாணின் விலை உயர்ந்துள்ளது. அரச ஊழியருக்கு சம்பள உயர்வுகள் எவையும் இல்லை. ஆனால் சமாதானம் என்ற ஒன்றையே நிலைநாட்டுவதாதக் கூறிகாலத்தை இழுத்தடிக்கிறது.

விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனுடைய சிறைத் தண்டனை தீர்ப்பானது பயங்கரவாத தடை சட்டத்தின் கீழே வழங்கப்பட்டதாகும். உண்மையில் சட் மா அதிபர் தீர்ப்பு வழங்குவதற்கு ஒரு நிமிடத்திற்கு முன்பே வழக்கை வாபஸ் பெற்றிருக்கலாம். இத் தீர்ப்பு இந்த நேரத்தில் தேவையற்ற ஒன்று இதன் மூலம் ஐ. தே. கட்சி இரு தலைகளை கொண்டு செயற்படுகின்றது என்பது தெரிய வருகின்றது. (க-9, 7)

## செய்தித் துளிகள்

### விதை நெல் விநியோகம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கண்டாவளை ஊரியான் பகுதியில் பெரும் போக நெற்செய்கைக்காக மீளக்குடியமர்ந்துள்ள மக்களுக்கு விதைநெல் வழங்கப்பட்டுள்ளது

கிளிநொச்சி பிரதேச செயலர் மேற்கொண்ட நிவாரண நடவடிக்கையினால் கிளிநொச்சி அரச அதிபர் சுமார் 80 குடும்பங்களிற்கு தலா 2 மூடை விதை நெல் வீதம் 160 மூடை விதை நெல்லை வழங்கியுள்ளார். (க-பி-10)

### நிதி ஒதுக்கீடு இல்லை

(திருநெல்வேலி)

மாமுனை அ. த. க. பாடசாலைக்கு கட்டடம் கட்டுவதற்கு எதுவித நிதியும் ஒதுக்கப்படவில்லையென அப் பகுதி மக்கள் புகார் தெரிவித்துள்ளனர்.

தளபாடக் கொள்வனவிற்கு மட்டுமே நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதாகவும் அப் பகுதி மக்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, வடமராட்சி கிழக்கின் ஏனைய பாடசாலைகள் உலக வங்கியின் நிதி உதவியுடன் புனரமைப்புச் செய்யப்பட்டு வருவதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (க-பி-43)

### கடன் படிவங்கள் விநியோகம்

(சண்டிலிப்பாய்)

வீடு கட்டுவதற்கு கடன் பெறுவதற்கான விண்ணப்பப் படிவங்கள் கடந்த மாதம் தொடக்கம் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தில் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

தேசிய வீடமைப்பு அதிகாரசபையினால் விநியோகிக்கப்படும் இப்படிவங்களைப் பூரணப்படுத்துவதன் மூலம் 50 ஆயிரம் ரூபா வரையிலான பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம் என தெரிவிக்கப்படுகிறது.

வீடுகள் புனரமைப்பதற்கு அல்லது காணிவாங்குவதற்கு இப் பணத்தைப் பயன்படுத்த முடியும் என்று மேலும் தெரிவிக்கப்படுகிறது. (க-258)

### திருட்டு சம்பவங்கள்

(சுண்டுக்குளி)

கொய்யாத்தோட்டம் புது றோட்டில் அமைந்துள்ள கிறிஸ்துராசா கோவிலின் வெளிப்புறமாக இருந்தமாதா சுரூபம் நேற்று முன்தினமிரவு களவாடப்பட்டுள்ளது;

இதேவேளை ஈச்சமோட்டை விதானையார் வீதியில் அமைந்துள்ள ஜேக்கப் பலசரக்கு கடையில் மேசைக் கண்ணாடி உட்பட அனைத்துப் பொருட்களும் நேற்று முன்தினமிரவு களவாடப்பட்டுள்ளன. (க-பி-110)

### பனம் விதை நாட்டல்

(திருநெல்வேலி)

வடமராட்சி கிழக்கு குடாரப்பு பகுதிக்கும், மாமுனைப் பகுதிக்கும் இடைப்பட்ட பகுதியில் 30 ஆயிரம் பனம் விதை நாட்டும் திட்டம் கடந்த வாரம் வைபவரீதியாக ஆரம்பித்து வைக்கப்பட்டது;

பனை அபிவிருத்திச் சபையின் வெளிக்கள உத்தியோகத்தர் மு. வி. தர்மகுலசிங்கம் தலைமையில்இடம்பெற்றஇவ் வைபவத்தில் மருதங்கேணி பிரதேச செயலர் வி. ப, வேலாயுதபிள்ளை உட்பட பிரமுகர்கள் பலர் இவ்வைபவத்தில் கலந்து கொண்டனர். (க-பி-43)

### மருத்துவ சேவைக்கு அம்புலன்ஸ் அன்பளிப்பு

(திருநெல்வேலி)

வடமராட்சி கிழக்கில் உள்ள விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் உள்ள மக்களிற்கு மருத்துவ வசதியை மேம்படுத்தும் நோக்குடன் திலீபன் மருத்துவ சேவைப் பிரிவினரால் செம்பியன் பற்று மற்றும் ஆழியவளைப் பகுதிகளில் மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

இதேவேளை, மருத்துவ சேவைப் பிரிவினரிற்கு உடுத்துறை கிராமவாசி ஒருவர் அம்புலன்ஸ் வண்டி ஒன்றை அன்பளிப்பாக வழங்கியுகள்ளார். (பி-43)

ஐக்கியதேசிய முன்னணி அரசின்

## வரவு-செலவு திட்டத்திற்கு கூட்டமைப்பு ஆதரவு

(கொழும்பு)

ஐக்கியதேசிய முன்னணி அரசின் இரண்டாவது வரவு-செலவுத்திட்டத்திற்கு தமிழ்த் தேசிய கூட்டமைப்பு ஆதரவு வழங்குவதென தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

கூட்டமைப்பு பாராளுமன்ற உறும்பினர் ஜோசப் பரராசசிங்கம் நேற்று முன்தினம் பாராளுமன்றத்தில் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்; இரு தசாப்தங்களாக நாட்டில் நிலவிவந்த போரினை முடிவுக்கு கொண்டுவரும்நோக்குடன், பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவினால் முன்னெடுத்துச் செல்லப்படும் சமாதானப் பேச்சுவார்த்தைகள்குறித்த காரணங்களுக்காகவே இத்தீர்மானம் எடுக்கப்பட்டது.

ஐக்கியதேசிய முன்னணி அரசு ஆட்சிஅமைத்தபோது தமிழீழ விடுதலைப் புலிகளால் பிரகடனப்படுத்தப்பட்ட போர்நிறுத்த அறிவிப்பை சிறந்தமுறையில் பயன்படுத்தி இருப்பதாலேயே இன்றைய அரசியல்நிலையில் பாரிய மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன எனவும் ஜோசப் பரராசசிங்கம் சுட்டிக்காட்டினார்.

அதேவேளை, பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கான நிதி ஒதுகீடு குறையும்என எதிர்பார்க்கப்பட்டபோதிலும் அரசினால் சமர்ப்பிக்கப்பட்ட வரவு-செலவுத்திட்டத்தில் கடந்த வருடத்தைவிட, அடுத்த வருடத்துக்கானஒதுக்கீடு சற்று அதிகரித்துள்ளது என்றும் அவர் தெரிவித்தார். (க-பி-08)

சங்கானை பிரதேச செயலர் பிரிவில்

## முக்கிய திட்டங்களுக்கு நிதி ஒதுக்கப்படும்

### எம். பி. உறுதி

(சுதுமலை)

சங்கானை பிரதேச செயலர் பிரிவுக்கு அடுத்த வருடம் சில முக்கிய கிராமிய அபிவிருத்தி திட்டங்களிற்கு பன்முகப்படுத்தப்பட்ட வரவு–செலவுத் திட்ட நிதியிலிருந்து பணம் ஒதுக்கித் தரப்படும்.

வலி-மேற்கு பிரதேச செயலக ஒருங்கிணைப்புக் கூட்டம் பதில் பிரதேச செயலர் செ. ரத்தினம் தலைமையில் அண்மையில் நடைபெற்றபோதே அக்கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம். கே. சிவாஜிலிங்கம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்;

இப்பகுதியில் கடமை புரியும் கிராம அலுவலர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து பல்வேறு விதங்களில் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டன. இது குறித்து தக்க வேளையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றார்.

விவசாயம், கால்நடை, தபால்பகுதி, மின்சாரம் ஆகிய துறைகள் சார்ந்த உத்தியோகத்தர்களும் இந் நிகழ்வில் கலந்துகொண்டனர். (க-பி-252)

### மாவீரர் துயிலும் இல்லங்கள் புனரமைப்பு

யாழ். குடா நாட்டில் மாவீரர் தினத்தை ஒட்டி மாவீரர் துயிலும் இல்லங்கள் அனைத்தும் புனரமைக்கப்பட்டுவருகின்றன.

கொடிகாமம், கோப்பாய், நவிண்டில் ஆகிய இடங்களில் உள்ள மாவீரர் துயிலும் இல்லங்கள்புனரமைக்கப்பட்டு வருகின்றன. (க-பி-43)

# தமிழீழ மீட்பு நிதிக் கடன் மீளளிப்பு

## தெரிவு செய்யப்பட்டோர் விபரம் தொடர்ச்சி...

### வேலணை உதவி அரச அதிபர் பிரிவு

| | |
|---|---|
| யா/வே/1386 | திருமதி சிவாஜினி தயாபரன் |
| யா/வே/1399 | திருமதி கிருஷ்ணம்மாள் |
| யா/வே/1401 | திருமதி சியாமளா குலேந்திரா |
| யா/வே/1409 | வைத்திலிங்கம் வேலாயுதபிள்ளை |
| யா/வே/1415 | திருமதி பியற்றிஸ் குணரட்ணம் |
| யா/வே/1417 | பூலோகராசா தர்மகுணராசா |
| யா/வே/1451 | செபஸ்ரியான்பிள்ளை கிறகரி |
| யா/வே/1467 | திருமதி சௌந்தரம் கந்தையா |
| யா/வே/1481 | சுப்பிரமணியம் பசுபதிப்பிள்ளை |
| யா/வே/1482 | திருமதி லில்லியூஸ்மரியை அருளானந்தம் |
| யா/வே/1484 | திருமதி மகாலட்சுமி கோபாலபிள்ளை |
| யா/வே/1499 | முத்தையா பஞ்சசோதி |
| யா/வே/1515 | திருமதி பராசக்தி தம்பிஐயா |
| யா/வே/1521 | சூசைப்பிள்ளை தேவசகாயம் |
| யா/வே/1524 | நாகமணி தவலிங்கம் |
| யா/வே/1597 | திருமதி சின்னம்மா நாகரெத்தினம் |
| யா/வே/1618 | ஆறுமுகம் அருளம்பலம் |
| யா/வே/1712 | ஆறுமுகம் இராசலிங்கம் |
| யா/வே/1758 | திருமதி சிவக்கொழுந்து சுப்பிரமணியம் |
| யா/வே/1761 | அம்பலவாணர் வைரமுத்து |
| யா/வே/1791 | திருமதி யோகேஸ்வரி சிவராசா |
| யா/வே/1828 | சவிரி அந்தோனி பொன்னந்து |
| யா/வே/1833 | திருமதி கண்மணி நாகராசா |
| யா/வே/1853 | நாகநாதி மதியாபரணம் |
| யா/வே/1863 | திருமதி மனோரஞ்சினி சிவராமலிங்கம் |
| யா/வே/1885 | திருமதி தங்கம்மா கார்த்திகேசு |
| யா/வே/1887 | திருமதி சிவபாக்கியம் செல்லையா |
| யா/வே/1934 | பரமலிங்கம் கருணானந்தன் |
| யா/வே/2004 | திருமதி பாக்கியம் கந்தையா |
| யா/வே/2012 | தவமலர் சிவஞானம் |
| யா/வே/2034 | பெஞ்சமின் அந்தோனிப்பிள்ளை |
| யா/வே/2069 | திருமதி புவனேஸ்வரி சோமசுந்தரம் |
| யா/வே/2189 | திருமதி செல்லம்மா சின்னத்துரை |
| யா/வே/2246 | கோபாலப்பிள்ளை முருகதாஸ் |
| யா/வே/2345 | திருமதி மல்லிகா விக்கினராசா |
| யா/வே/2390 | சிவப்பிரகாசம் கனகசபாபதி |
| யா/வே/2403 | சின்னத்தம்பி கந்தவனம் |
| யா/வே/2435 | திருமதி பத்மாவதி முதலித்தம்பி |
| யா/வே/2437 | குருசுமுத்து அல்பிறேட் |
| யா/வே/2439 | திருமதி இரத்தினம் கதிரவேலு |
| யா/வே/2445 | திருமதி விஜயலட்சுமி பாலச்சந்திரன் |
| யா/வே/2462 | திருமதி இராஜேஸ்வரி தெய்வேந்திரன் |
| யா/வே/2519 | ஜெயகௌரி கனகசபை |
| யா/வே/2544 | திருமதி திருப்பதி குணரெத்தினம் |
| யா/வே/2574 | திருமதி கனகாம்பிகை கந்தையா |
| யா/வே/2577 | பொன்னையா சபாரட்ணசிங்கம் |
| யா/வே/2601 | மங்களநாயகி சோமசுந்தரம் |
| யா/வே/2605 | திருமதி ஜீவேஸ்வரி செல்வரட்ணம் |
| யா/வே/2618 | திருமதி மொனிக்கம்மா அமிர்தநாதன் |
| யா/வே/2624 | புஸ்பராணி கனகரத்தினம் |
| யா/வே/2630 | உமாபூ கந்தசாமி |
| யா/வே/2635 | திருமதி இராஜேஸ்வரி அழகியநாதன் |
| யா/வே/2683 | பிரான்சிஸ் கிறிஸ்ரி வேதநாயகம் |
| யா/வே/2697 | திருமதி நகுலேஸ்வரி சாம்பசிவம் |
| யா/வே/2718 | திருமதி நிர்மலா நடனசபாபதி |
| யா/வே/2744 | பாலசிங்கம் தில்லைச்சிவன் |
| யா/வே/2750 | விஸ்வலிங்கம் கந்தையா |
| யா/வே/2802 | செபஸ்தியாம்பிள்ளை பிரான்சிஸ் |
| யா/வே/2810 | திருமதி வேதவல்லி வீரகத்தி |
| யா/வே/2885 | வேலுப்பிள்ளை சேதுகாவலன் |

### மானிப்பாய் உதவி அரச அதிபர் பிரிவு

| | |
|---|---|
| யா/மா/14 | திருமதி சீதாலக்சுமி யோகநாதன் |
| யா/மா/86 | ஆறுமுகம் லட்சுமணன் |
| யா/மா/93 | சங்கரப்பிள்ளை கந்தையா நடராசா |
| யா/மா/98 | திருமதி ரஞ்சிதம் நவரட்ணராஜா |
| யா/மா/100 | கணேசரத்தினசிங்கம் இராசகாரியார் |
| யா/மா/112 | பொன்னையா சிவலிங்கம் |
| யா/மா/119 | கணபதிப்பிள்ளை தவராஜா |
| யா/மா/130 | சாம்பதாசிவசர்மா நடராஜா |
| யா/மா/133 | சின்னத்தம்பி சோமசுந்தரம் |
| யா/மா/204 | நாகலிங்கம் நடராஜா |
| யா/மா/207 | திருமதி பத்மினி சிவமயம் |
| யா/மா/222 | திருமதி சகுந்தலா அன்னசிங்கம் |
| யா/மா/225 | திருமதி செல்லம்மா சின்னத்துரை |
| யா/மா/230 | சின்னத்தம்பி தாமலிங்கம் |
| யா/மா/241 | செல்லையா சண்முகலிங்கம் |
| யா/மா/242 | செல்லையா சண்முகலிங்கம் |
| யா/மா/243 | பொன்னையா சபாரத்தினம் |
| யா/மா/257 | திருமதி மோகனாம்பாள் கேசவமூர்த்தி |
| யா/மா/307 | திருமதி சந்திரா இரத்தினம் |
| யா/மா/320 | திருமதி செல்வராணி சவுந்தரநாயகம் |
| யா/மா/337 | திருமதி மரகதம் பாலேந்திரன் |
| யா/மா/352 | அருளம்பலம் மார்க்கண்டு |
| யா/மா/354 | திருமதி நகுலேஸ்வரி சிறிஸ்கந்தராஜா |
| யா/மா/373 | திருமதி பியற்றில் இராசகுலநாயகி குலேந்திரன் |
| யா/மா/375 | திருமதி ஸ்றெலா இராஜவதி சேனாதிராஜா |
| யா/மா/398 | முத்துக்குமாரு ஆறுமுகம் |
| யா/மா/401 | இராமலிங்கம் தேவதாஸ் |
| யா/மா/413 | திருமதி மலர்வதி கந்தையா |
| யா/மா/429 | திருமதி மகேஸ்வரி அரசகுலரத்தினம் |
| யா/மா/444 | திருமதி நந்தேவி கருணாநிதி |
| யா/மா/447 | கலாரஜனி பஞ்சலிங்கம் |
| யா/மா/458 | சின்னத்தம்பி இராசரத்தினம் |
| யா/மா/465 | திருமதி நளாயினி சுந்தரகுமார் |
| யா/மா/485 | திருமதி சாந்தகுமாரி மகேஸ்வரன் |
| யா/மா/535 | திருமதி இரத்தினம் செல்லத்துரை |
| யா/மா/541 | தம்பிமுத்து சுந்தரலிங்கம் |
| யா/மா/549 | கௌரி தளையசிங்கம் |
| யா/மா/632 | இரட்ணசபாபதி விமலேந்திரன் |
| யா/மா/705 | இளையதம்பி தவலிங்கம் |
| யா/மா/796 | திருமதி சாரதாதேவி சிவலிங்கராசா |
| யா/மா/882 | திருமதி நவமணி சிவானந்தன் |
| யா/மா/925 | அம்பலவாணர் மகேந்திரன் |
| யா/மா/962 | இளையதம்பி இராசரத்தினம் |
| யா/மா/1118 | திருமதி சற்குணம் செல்லத்துரை |
| யா/மா/1124 | திருமதி சறோஜினி தனபாலசுந்தரம் |
| யா/மா/1127 | திருமதி செல்வராணி மோன்ராஜ். |
| யா/மா/1133 | சிவசாமி சிவனேசன் |
| யா/மா/1170 | திருமதி சர்வலோகநாயகி வீரசிங்கம் |
| யா/மா/1222 | சுந்தரம்பிள்ளை யோகநாதன |
| யா/மா/1306 | சின்னவன் பொன்னையா |
| யா/மா/1316 | வற்சலா றொபேட்டியூவல் |
| யா/மா/1381 | திருமதி சுமனதேவி தனபாலசிங்கம் |
| யா/மா/1392 | நாகநாதன் தர்மலிங்கம் |
| யா/மா/1443 | கந்தையா கிருபாமூர்த்தி |
| யா/மா/1507 | திருமதி இராசமணி தம்பு |
| யா/மா/1518 | சுபாஷினி நடராஜா |
| யா/மா/1535 | வயிரவி செல்லத்துரை |
| யா/மா/1593 | கந்தையா இராசநாயகம் |
| யா/மா/1612 | தம்பையா கனகரத்தினம் |
| யா/மா/1645 | திருமதி பேணடேற் அருளப்பு |
| யா/மா/1670 | திருமதி முத்தம்மா சுப்பிரமணியம் |
| யா/மா/1688 | ஐயம்பிள்ளை வைத்தியநாதர் |
| யா/மா/1703 | பிறேமளா வஸ்ரியாம்பிள்ளை |
| யா/மா/1808 | நல்லையா செல்வரத்தினம் |
| யா/மா/1850 | குணபாக்கியம்கதிரவேலு |
| யா/மா/1922 | கந்தையா கணேசன் |
| யா/மா/1924 | திருமதி கனகம்மா அலன் |
| யா/மா/1934 | திருமதி செல்வமலர் இரத்தினசிகாமணி |
| யா/மா/1988 | குமாரசிங்கம் அருளம்பலம் |
| யா/மா/2005 | திருமதி யுகாவதி சுப்பிரமணியம் |
| யா/மா/2011 | கனகரத்தினம் சிறிதரன் |
| யா/மா/2028 | திருமதி வசந்தா ஜெகநாதன் |
| யா/மா/2131 | திருமதி புளுவல் இன்பமலர்கனகசபை |
| யா/மா/2156 | சண்முகம் முருகதாஸ் |
| யா/மா/2184 | செல்வநாயகம் வேல்வேந்தன் |
| யா/மா/2202 | தாமோதரம்பிள்ளை சிவபாலன் |
| யா/மா/2219 | சபாரத்தினம் அருள்சுப்பிரமணியம் |
| யா/மா/2353 | அம்பலவாணர் நற்குணசிங்கம் |
| யா/மா/2391 | திருமதி புஸ்பதேவி நித்தியானந்தம் |
| யா/மா/2393 | திருமதி பரமேஸ்வரி சுந்தரலிங்கம் |
| யா/மா/2475 | சபாரத்தினம் சிறிகணேஷ் |
| யா/மா/2499 | சரவணமுத்து துரைச்சாமி |
| யா/மா/2554 | திருமதி அமிர்தநாயகி சீவரத்தினம் |
| யா/மா/2621 | அருணாசலம் கந்தசாமி |
| யா/மா/2629 | வஸ்தியாம்பிள்ளை குணசிங்கம் |
| யா/மா/2783 | ஐயாத்துரை தனபாலசிங்கம் |
| யா/மா/2828 | திருமதி சரஸ்வதி தம்பிப்பிள்ளை |
| யா/மா/2830 | திருமதி மேரி ஆன்கிறேஸ் இமானுவேல் |
| யா/மா/2856 | தம்பிராஜா விஜயரத்தினம் |
| யா/மா/2863 | கந்தையா கோபிநாத் |
| யா/மா/2869 | சோதீஸ்வரி அப்புலிங்கம் |
| யா/மா/2921 | திருமதி லூர்த்து சவேரியாப்பிள்ளை சூசைப்பிள்ளை |
| யா/மா/2947 | திருமதி யோகேஸ்வரி நவரட்ணராசா |
| யா/மா/2961 | திருமதி மெற்றில்டா சூசைப்பிள்ளை |
| யா/மா/2963 | செல்வத்தம்பி தெய்வேந்திரம் |
| யா/மா/3022 | திருமதி மேறீற்றம்மா யேசுதாசன் |
| யா/மா/3058 | பழனிவேல் இரட்னதாஸ் |
| யா/மா/3069 | திருமதி மரியமலர் சூசைப்பிள்ளை |
| யா/மா/3071 | திருமதி மரியம்மா மரியாம்பிள்ளை |
| யா/மா/3098 | திருமதி பத்மாவதி சின்னத்துரை |
| யா/மா/3107 | திருமதி மேரிராணி சூசைப்பிள்ளை |
| யா/மா/3131 | திருமதி மெற்றில்டா யோசவ் |
| யா/மா/3149 | வடிவேலு கனகசபை |
| யா/மா/3157 | திருமதி தயாநந்தி கிரிதரன் |
| யா/மா/3165 | இசுதோர் அல்பேட் |
| யா/மா/3183 | அந்தோனிப்பிள்ளை யேசுதாசன் |
| யா/மா/3219 | திருமதி கௌரி சக்திவேல் |
| யா/மா/3255 | அரியற்றத டொடா றிச்சாட் |
| யா/மா/3261 | திருமதி லூர்தம்மா வஸ்தியாம்பிள்ளை |
| யா/மா/3264 | லூக்கேஸ்பிள்ளை அருளானந்தம் |
| யா/மா/3291 | சின்னத்துரை ஏரம்பமூர்த்தி |
| யா/மா/3292 | சூசைப்பிள்ளை அரியநாயகம் |
| யா/மா/3300 | திருமதி லூர்துமேரி அந்தோனிப்பிள்ளை |
| யா/மா/3302 | திருமதி றெஜினா ஞானபூசனம் இம்மனுவல் |
| யா/மா/3304 | கந்தையா சின்னத்தம்பி |
| யா/மா/3330 | திருமதி மேரியோசப்பின் மனோன்மணி பஸ்ரியாம்பிள்ளை |
| யா/மா/3361 | திருமதி அமிர்தராணி அலோசியஸ் |
| யா/மா/3396 | திருமதி ஞானம்மா வின்சென்ற் |
| யா/மா/3450 | திருமதி அன்னம்மா லோறன்ஸ் |
| யா/மா/3458 | திருமதி லூர்ட்ஸ்மேரி பாக்கியநாதன் |
| யா/மா/3469 | திருமதி ஜோசீனம்மா ஆரோக்கியநாதன் |
| யா/மா/3472 | திருமதி பிரான்சிகா ஜோஜ் எட்வேட் |
| யா/மா/3509 | றீற்றா ஜெயதேவி மண்டநாயகம் |
| யா/மா/3542 | திருமதி தனலட்சுமி விக்கினேஸ்வரன் |
| யா/மா/3641 | திருமதி கிருபாலட்சுமி நாகரத்தினம் |
| யா/மா/3667 | ஐயாத்துரை பாலசுப்பிரமணியம் |
| யா/மா/3703 | திருமதி செல்லம்மா துரைராசா |
| யா/மா/3780 | திருமதி இந்திராணி சின்னராசா |
| யா/மா/3780 | மேரியோசப்பிரகாசம் ஞானப்பிரகாசம் |
| யா/மா/3809 | செல்லத்துரை செல்வரத்தினம் |
| யா/மா/3834 | இராசரத்தினம் நடராசா |
| யா/மா/3836 | சதாசிவம் சீவரத்தினம் |
| யா/மா/3862 | நடராசா தங்கராஜா |
| யா/மா/3864 | திருமதி மேரிமெற்றலின் லோறன்ஸ் |

தொடரும்......!

# யாழ்.தேசிய கல்வியற் கல்லூரி அனுமதி நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டோர்

### கணிதம்

| | |
|---|---|
| குகநாதன் நிரஞ்சன் | யாழ்ப்பாணம் |
| தவசுப்பிரமணியம் சுபாஸ்கரன் | சாவகச்சேரி |
| செல்வராஜா வாசுகி | யாழ்ப்பாணம் |
| சிவபாலன் இந்திரகுமார் | மானிப்பாய் |
| சுந்தசாமி துசியந்தன் | சுன்னாகம் |
| செல்வராஜா சுதர்சன் | சுழிபுரம் |
| விசுவலிங்கம் இளமோகனன் | பருத்தித்துறை |
| பாலசிங்கம் கிருபாகரன் | புலோலி |
| பரராஜசிங்கம் கிரோசன் | அல்வாய் |
| பாலசிங்கம் கஜேந்திரன் | யாழ்ப்பாணம் |
| கிருஸ்ணா சேயோன் | கரவெட்டி |
| சிறிரங்கநாதன் தாரணி | பருத்தித்துறை |
| பவளகாந்தன் ஜெயகாந்தன் | காங்கேசன்துறை |
| செல்வநாயகம் ஜெயசங்கர் | பருத்தித்துறை |
| செல்வராஜா கஜீஸா | அத்தியடி |
| பசுபதி நளினி | பருத்தித்துறை |
| சிவபாலன் சர்வேஸ்வரன் | கோண்டாவில் |
| மாணிக்கம் கஜீபன் | சாவகச்சேரி |
| இரத்தினசபாபதிக் குருக்கள் | |
| அனுரமணன் | பருத்தித்துறை |
| மகேந்திரன் மஞ்சுளா | கரவெட்டி |
| உசா உலகநாதன் | சுழிபுரம் |
| தட்சணாமூர்த்தி அனோஜா | நெடுந்தீவு |
| சந்திரசேகரம் நிரேஸ் | கல்வியங்காடு |
| கார்த்திகேஸன் அருட்கஜன் | தெல்லிப்பழை |
| சத்தியபாமா சின்னத்தம்பி | கொழகாமம் |
| இராமச்சந்திரன் பாமதி | மானிப்பாய் |
| மகேந்திரராசா புனிதா | கரவெட்டி |
| பாலசிங்கம் பிரதீபன் | சண்டிலிப்பாய் |
| சின்னத்துரை குலேந்திரன் | யாழ்ப்பாணம். |
| வில்வராஜா மதிவதனன் | புத்தூர் |
| வேலுப்பிள்ளை செந்தூரன் | மானிப்பாய் |
| M.வாசுகி | சந்திவேலி |
| இராஜதுரை இரனிதா | சண்டிலிப்பாய் |
| பசுபதி கம்சாரதி | அளவெட்டி |
| செல்வநாயகம் பிரதீபன் | மானிப்பாய் |
| சிவசுப்பிரமணியம் சிவனுசா | தெல்லிப்பழை |
| இராதிகா மனோகரன் | யாழ்ப்பாணம் |
| தெய்வேந்திரன் தேவதாரணி | இணுவில் |

### ஆரம்பப் பிரிவு

| | |
|---|---|
| இரகுநாதன் சுபாஜினி | உருமபிராய் |
| குணசிங்கம் லாவண்யா | நெல்லியடி |
| சந்திரவதனா திருக்கிளி | வல்வெட்டித்துறை |
| குமுதினி தில்லையம்பலம் | கரவெட்டி |
| தங்கமலாசெல்வி இரத்தினசிங்கம் | நல்லூர் |
| கதிரவேலு புஸ்பகௌதமி | கரவெட்டி |

### சமூகக்கல்வி

| | |
|---|---|
| செபஸ்ரியம்பிள்ளை வெலிங்ஸ் ஜெயந்தன் | யாழ்பாணம் |
| தர்மதாஸன் தனுசா | சண்டிலிப்பாய் |
| வித்தியா கந்தசாமி | மீசாலை |
| சிவசுப்பிரமணியம் சிவராஜி | சாவகச்சேரி |

### நாடகமும் அரங்கியலும்

| | |
|---|---|
| இரத்தினம் சுகந்தினி | கரந்தன் |

### சைவசமயம்

| | |
|---|---|
| பொன்னுத்துரை உதயரஞ்சினி | வரணி |
| உஷா பொன்னம்பலம் | அளவெட்டி |
| யோகராஜா வேணுகோபன் | ஏழாலை |
| மாயா ரவீந்திரன் | யாழ்ப்பாணம் |
| இரத்தினம் ஜெகநாதன் | வல்வெட்டித்துறை |
| துரைச்சாமி தவரூபி | வல்வெட்டித்துறை |

### கிறீஸ்தவம்

| | |
|---|---|
| மரியதாஸ் மெடோனா | யாழ்ப்பாணம் |
| யேசுதாஸன் தர்மதுரை | நெடுந்தீவு |
| யோசெப் நீவீஸ் கொஸ்லேற் | யாழ்ப்பாணம் |
| மரியதாஸ் மரியசெல்வம் | யாழ்ப்பாணம் |
| தங்கராஜா கஜலின் கதிரொழி | உடுவில் |
| சின்னத்துரை குலேந்திரன் | யாழ்ப்பாணம் |
| அன்ரன் இராசநாயகம் ஜெயசெல்வராஜா | அளவெட்டி |
| திருத்துவராஜா திவாகரன் | அல்வாய் |
| விசுவம் சகாயமணி | அச்சுவேலி |
| டொமினிக் பற்றிசியா | உரும்பிராய் |
| அன்ரனிதாஸ் மேர்வின் கஜந்தினி | சுன்னாகம் |

## ஈரானில் மாணவர் ஆர்ப்பாட்டம்

(தெஹறான்)
அரசியல் கைதிகளை விடுதலை செய்யுமாறுவலியுறுத்தி ஆயிரக்கணக்கான மாணவர்கள் ஈரானில் ஆர்ப்பாட்டப் பேரணியொன்றை நடத்தியுள்ளனர்.

தீவிரப் போக்குடன் செயற்படும் நீதிமன்றங்கள் கடும் தண்டனைகளை விதிக்கக் கூடாது, என்று ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட மாணவர்கள் ஈரான் அரசை வலியுறுத்தியுள்ளனர். (4)

## சட்டமன்ற உறுப்பினர் மறைவு

(சென்னை)
தமிழ்நாடு சாத்தான் குளத் தொகுதியின்சட்டமன்றஉறுப்பினர் எஸ்.எஸ். மணிநாடார் நேற்று சென்னை தனியார் மருத்துவ மனையில் காலமானார்.

66 வயதான இவர் சிறுநீரகக் கோளாறு காரணமாக சுடந்த 2 வாரங்களாக மருத்துவ மனையில் சிகிச்சை பெற்றுவந்தார்.என்பதுகுறிப்பிடத்தக்கது. (02)

ஐ. நா. வின் புதிய தீர்மானம்

# அமெரிக்க மிரட்டலுக்கு ஐ. நா. பணிந்து விட்டது

## ஈராக்கிலிருந்து பலத்த கண்டனம்

(பக்தாத்)
ஐக்கிய நாடுகள்சபை அமெரிக்காவால் கடந்த வெள்ளிக்கிழமை சமர்ப்பிக்கப்பட்ட புதிய தீர்மானத்தை ஏற்றுக்கொண்டமை தொடர்பாக ஈராக்கிலிருந்து கடுமையான கண்டனங்கள் வந்துகொண்டிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

அமெரிக்காவின் மிரட்டலின் காரணமாகவே இப்புதிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதுஎன்று ஈரரக்கிய அதிகார பூர்வ செய்தி நிறுவனம் தெரிவிக்கின்றது.

தீர்மான நிபந்தனைகள் எவ்வளவு கடுமையானதாக இருந்தாலும் அவற்றை ஏற்றுக் கடைப்பிடிப்பதைத்தவிர ஈராக்கிற்கு வேறு வழியில்லை.

புதியதீர்மானம்நியாயமற்றதாகவும் தீய எண்ணங்கள் உள்ளடங்கியதாகவும் இருந்தாலும் ஈராக்கின் தலைமையகம் அதனைத் தற்போது அமைதியாகப் பரிசீலித்து வருகின்றது என அறிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையைப் பயன் படுத்தி ஈராக் மீது தாக்குதல் நடத்தவேண்டும் என்ற வெறியை அமெரிக்கா தீர்த்துக் கொள்ளப்பார்க்கின்றது. என்றும்.

படையெடுக்க வேண்டும். உயிர்களைக் கொல்ல வேண்டும் என்று அமெரிக்க அதிபர் புஷ் அளவற்ற தாகம் கொண்டுள்ளார் என்றும்.

ஆயுதப்பரிசோதகர்களின் பணியில் தலையிட்டு தாக்குதல் நடத்த பொய்யான காரணங்களை அமெரிக்கா தேட இத் தீர்மானம் இடம் கொடுத்து விடும் என்றும். ஈராக் கடுமையானகண்டனங்களை வெளியிட்டுள்ளது (பி-4)

## சீனாவில் சுரங்க விபத்து 26 பேர் உயிரிழப்பு

(பெய்ஜிங்)
சீனாவின் நிலக்கரி சுரங்கம் ஒன்றில் நேற்று முன்தினம் ஏற்பட்ட வெடிவிபத்தில் 26 பேர் பலியாகியுள்ளனர்.

சீனாவின் சைன்சீ மாகாணத்திலுள்ள நிலக்கரிச் சுரங்கத்திலேயே இந்தவிபத்து ஏற்பட்டுள்ளது.

உலகிலேயே அதிக நிலக்கரிச் சுரங்கம் காணப்படும் நாடு சீனா என்பதும் கடந்த வருடம் மட்டும் நிலக்கரி சுரங்க விபத்தில் இங்கு இறந்தவர்களின் எண்ணிக்கை 7 ஆயிரம் என்பதும் குறிப்பிடத்தக்கது. (2)

# உலக தரிசனம்

# 2 லட்சம் அமெரிக்க படைகள் தயார் நிலை

## ஈராக் மீதான தாக்குதலுக்கு

(நியூயோர்க்)
ஈராக்கின் மீது தாக்குதல் நடத்தப் பட்டால் முதல் கட்டத் தாக்குதலுக்கு சுமார் 2 லட்சம் துருப்புக்கள் ஈடுபடுத்தப்படும் என்று தெரியவந்துள்ளது.

ஈராக்கின் மீது தாக்குதல் நடத்தி அதனை வீழ்த்தி தம் கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்க பெருமளவிலான துருப்புக்கள் தேவை யென்று அமெரிக்க இராணுவத் தளபதி டொமில்ஸ்ராங் தெரிவித்த கருத்தினை ஜனாதிபதி புஷ் ஏற்றுக்கொண்டுள்ளார்.

தாக்குதல் ஆரம்பிக்கப்படுமாயின் வி. 1, வி. 2 ரகக் குண்டு விமானங்கள் சதாம் ஷுசேனின் மாளிகை மீது தாக்கப்படும் என்றும் டொமில்ஸ் தெரிவித்தார். (4)

## இந்திய மீனவர்களின் பாதுகாப்புக்காக புதிய தொடர்பு கருவி

(புதுடில்லி)
கடற் கொள்ளை இயற்கையின் சீற்றம் ஆகியவற்றின் போது கடலோர காவல் படையினருடன் உடனடியாக தொடர்பு கொள்வதற்கான புதிய கருவியினை கடல் மீனவர்களிற்கு விரைவில் வழங்க கிழக்கு கடலோரக் காவல் தளபதி கமோடார் ஆரஸ் வாசன் முடிவு செய்துள்ளார்.

சென்னையில் செய்தியாளர்களிடம் பேசிய இவர் ஒவ்வொரு மீனவரிற்கும் 20 ஆயிரம் ரூபா பெறுமதியான புதிய கருவியினை மானிய அடிப்படையில் வழங்குவதற்கான தீர்மானம் பற்றி அரசிடம் பரிந்துரை செய்யப்பட்டுள்ளதாகவும் மிகவிரைவில் இக்கருவியினை மீனவர்களிற்கு வழங்கப் போவதாக தெரித்துள்ளார். (பி-2)

## முரசொலிமாறனுக்கு அமெ.வில் சிகிச்சை

சென்னை மருத்துவ மனையில் சிகிச்சை பெற்றுவந்த இந்திய மத்திய தொழில் மற்றும் வர்த்தகதுறை அமைச்சர் முரசொலிமாறனுக்கு இன்னும் ஓரிரு தினங்களில் அமெரிககாவில்சிகிச்சை அளிக்கப்படவிருப்பதாக தி.மு.கழகம்அறிவித்துள்ளது. இருதயவால்வுமாற்றுஅறுவை சிகிச்சை செய்து கொண்ட இவர் மீண்டும் உடல்நிலை மோசமடைந்த காரணத்தினால் சென்னை மருத்துவ மனையில் கடந்த சில காலமாக சிகிச்சை பெற்று வந்தார். சிகிச்சை பயனளிக்காத காரணத்தினால் அமெரிக்காவுக்கு கொண்டுசென்று அங்குள்ள மருத்துவமனையொன்றில் அனுமதிக்கப்பட்டுசிகிச்சைஅளிககப்படவிருக்கிறது.

## பயிற்சி முகாம்களை மூடி ஊடுருவல்காரரை ஒப்படையுங்கள்

### பங்களாதேஷிடம் இந்தியா கோரிக்கை

(டாக்கா)
பங்களாதேஷில் உள்ள பயங்கரவாத பயிற்சி முகாம்கள் மூடப்பட்டு அந்நாட்டில் அடைக்கலம் புகுந்துள்ள இந்திய ஊடுருவலாளர்களை தம்மிடம் ஒப்படைக்கும்படி இந்தியா பங்களாதேஷிடம் கேட்டுக் கொண்டுள்ளது

பங்களாதேஷிலுள்ள 95 பயிற்சி முகாம்களினதும் 77 ஊடுருவலாளர்களினதும் பெயரடங்கிய பட்டியலை நேற்று இந்தியா பங்களா தேஷிடம் ஒப்படைத்துள்ளதென பூர்வ வட்டாரங்களிலிருந்து தெரியவருகின்றது.

இதேவேளை, பங்களா தேஷ் அரசு கடந்த சில தினங்களிற்கு முன் இந்திய அரசிடம் இந்தியாவிலுள்ள தனது நாட்டு குற்றவாளிகளைப்பிடித்துத் தரும்படி கோரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (பி-2)

ஜனாதிபதியின் செயற்பாட்டில்

## கிளர்ச்சியாளர் அதிருப்தி பேச்சுக்கள் இடை நிறுத்தம்

(அபிட்ஜான்)
ஐவரிக் கோஸ்ட்ஜனாதிபதி லோறன்ஸ் பாக்கோ கிளர்ச்சியாளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கு எடுத்து வந்த நடவடிக்கைகள்போதியதாக அமையவில்லை யென்ற குற்றஞ்சாட்டின் பேரில் கிளர்ச்சிவாதிகள் அரசுடன் நடத்திவந்த பேச்சுவார்த்தைகளை இடை நிறுத்தியுள்ளனர்.

மிகவும் முக்கியமானகிளர்ச்சித் தலைவரின் சகோதரர் கடந்தவாரம் அபிட்ஜான் நகரில் கொலைசெய்யப்பட்டதையடுத்து கிளர்ச்சி வாதிகள் ஜனாதிபதியின் செயற்பாடுகள் குறித்து அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

டோகோ நகரில் இடம் பெற்று வந்த சமாதான நடவடிக்கைகளின் போது இருதரப்புப்பேச்சாளர்களுடம் மேற்காபிரிக்கமத்தியஸ்தாகளுடன் விரிவான சமாதானத் திட்டமொன்றைஆராய்ந்து வந்தார்கள்.

இச்சமாதானத் திட்டம்இவ்வார இறுதியில் இருதரப்பினராலும் கைச்சாத்திடப்படலாம் என மேற்காபிரிக்க நாடுகளின் தலைவர்கள் நம்பிக்கையுடன் இருந்து வந்தார்கள்.

அரசு தங்களின் கோரிக்கைக்கு இணங்கினால் எந்த நேரத்திலும் மீண்டும் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கத் தயார் என்று கிளர்ச்சி வாதிகள் தரப்பிலான பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

கடந்த செப்ரம்பர் மாதம் மேற் கொள்ளப்பட்ட சதி முயற்சி யொன்று தோற்கடிக்கப்பட்டதையடுத்து 4 வாரங்களாக நடைபெற்ற சண்டையில் நூற்றுக் கணக்கானோர் கொல்லப்பட்டமை இங்கு குறிப்பிடத்தக்கது. (4-பி)

### விசர் நாய்க்கடிக்கு இலக்கானார்

கொடட்டிச் சந்திக்கு அருகாமையில் நேற்று விசர்நாய்க்கடிக்கு இலக்காகிய வயோதிபர் ஒருவர் யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கணபதிப்பிள்ளை பால சுந்தரம் (வயது-78) என்பவரே விசர்நாய்க்கடிக்குஇலக்காகிய வராவார். (க-07-16)

## அல்கெய்தாவின் அடுத்த இலக்கு தாய்வான்

### உளவு நிபுணர்கள் முன்னறிவிப்பு

(தைபீ)
அல்கெய்தா அமைப்பின் அடுத்த இலக்கு தாய்வானாக இருக்கும் என்று மேலை நாட்டு உளவு நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

இந்தோனேஷியாவின் பாலித் தீவில் கடந்த மாதம் இடம்பெற்ற குண்டுத்தாக்குதலிற்கு முன்னர் அல்கெய்தா அமைப்பினர் தாய்வானிலுள்ள மதுபான விடுதி சுற்றுலாத்துறை விடுதி ஆகிய இடங்களைத் தாக்கவே திட்டமிட்டு வந்துள்ளனர்

எனினும் அதற்கு முன்னர் பாலித்தீவில் தாக்குதல் நடத்தியுள்ளனர் என கைது செய்யப்பட்ட அல்கெய்தா அமைப்பின் உறுப்பினர் ஒருவர் மூலம் அறியப்பட்டுள்ளதென தெரிவித்த மேலை நாட்டு உளவு நிபுணர்கள், தாய்வானை எச்சரிக்கையாக இருக்கும் படியும் கோரியுள்ளனர். (2)

### காட்டுத்தீயைத் தணிக்க கால நிலை உதவி

(கான்பெரா)
அவுஸ்திரேலியாவில் ஏற்பட்டுள்ள காட்டுத் தீயைகட்டுப்படுத்த தற்போது அங்குநிலவி வரும் வானிலை பெரிதும் உதவி வருவதாக தெரிவிக்கப் படுகின்றது.

சிட்னி நகரத்தின் தென் மேற்கு பகுதியில் பரவிய இக் காட்டுத் தியினால்5 வீடுகளும் பல தொழிற்சாலைக் கட்டடங்களும் தீக்கிரையாகியுள்ளன. ( 2)

தாமின் புறுவது உலகின்
புறங்கண்டு
காமுறுவர் கற்றறிந்தார்

குறள்

வலம்புரி

## மாணவனின் அநியாய மரணம்!

ஸ்ரீஜயவர்த்தனபுரப் பல்கலைக்கழக மாணவர்களின் பகிடிவதை சண்டையில் முடிந்து மாணவன் ஒருவனின் உயிரைக் காவுகொண்டுவிட்டது.

தம் பிள்ளை பல்கலைக் கழகத்தில் படித்து பட்டத்தோடு வருவான் என எதிர்பார்த்திருந்த பெற்றோருக்கு அவனின் சடலமே போய்ச் சேர்கின்றது.

இதற்குள் அடங்கியிருக்கின்ற சோகங்களை எந்தப் பல்கலைக்கழகத்தின் மாணவர்களாலும்புரிந்து கொள்ள முடியுமெனக் கூற முடியாது.

பாடசாலையில் கற்று வெளியேறுகின்ற ஒரு மாணவன் பல்கலைக்கழக அனுமதி கிடைத்தவுடன் தனது நடத்தையில் மாற்றத்தை விரும்புகிறான் அல்லது வலிந்து பெற்றுக் கொள்கிறான். இந்நடத்தை சமூகத்தால் அங்கீகரிக்கப்பட்டதாகவே காணப்படுகிறது.

பெற்றோர், ஆசிரியர், சமூகம் என்ற கண்காணிப்புக்குள் நல்லொழுக்கத்தோடுஇருந்த மாணவன் பல்கலைக்கழக அனுமதி கிடைத்தவுடன் தானே சமூகத்தைத் தீர்மானிப்பவனாகவும், தன்னை எவரும் கட்டுப்படுத்தும் தகுதி பெற்றிருக்கவில்லை எனவும் இறுமாப்புக் கொள்கிறான்.

இலங்கையைப்பொறுத்தவரை பல்கலைக்கழகம் என்பது உயர் கல்விக் கூடம் என்பதை விட 'தலைக் கனம்' ஏற்றும் நிலையம் என்றே கருத வேண்டும்'

21 ம் நூற்றாண்டில் உலகம் தகவல் தொழில்நுட்பத்தை நோக்கி பல மைலகள் கடந்து சென்றுள்ள வேளையில் ஸ்ரீஜயவர்த்தனபுரப் பல்கலைக்கழகத்தில் பகிடிவதைச் சேட்டைக்குச் சக மாணவனொருவன் பலியாகியுள்ளானெனில் சக்திமான் படத்தைப் பார்த்துவிட்டு மாடியில் இருந்து குதித்து உயிர் துறந்த சிறுவர்களின் அறிவிலேயே பல்கலைக்கழக மாணவர்கள் இருக்கிறார்கள் என்பதை புரிந்து கொள்ள முடிகிறது.

இதுவிடயத்தை நாட்டிலுள்ள எல்லா மாணவர்களும் நல்லதொரு பாடமாக ஏற்று கோஷ்டி மோதல்களைத் தவிர்த்துக்கொள்வது அவர்களின் எதிர்கால நிம்மதிக்கு வழி வகுக்கும்.

# கைநாடிமூலம் நோயினையறிந்து குணமாக்கும்

# வைத்திய நிபுணரான செல்லப்பா கந்தையா

★ மு. வை. செ. பாலசுப்பிரமணியம் ★

வைத்தியர் மூத்ததம்பி வைரமுத்துவின் மகனான செல்லப்பா, இணுவில் கந்தசாமி கோயில் ஸ்தாபகர் சி. ஆறுமுகம் (கிராமத் தலைவர்)என்பவரின் சிரேஷ்ட புத்திரி சிவநாச்சி என்பவரைத்திருமணம் செய்ததன் பயனாக சிரேஷ்ட புத்திரராக செல்லப்பா கந்தையா 1904 ஆம் ஆண்டு ஜனனமானார்.

### கருத்துக் குறிப்பு

இவரைப் பற்றி ஆராயும் போது இவரின்தந்தையாரைப் பற்றியும் வைத்திய உலகிற்கு எடுத்துக் காட்ட வேண்டியது கடமையாகின்றது.

யேசு பக்தன் ஒருவன் நோயால் பீடிக்கப்பட்டுஇறக்கின்ற கால கட்டம். அவருடைய நோயின் தன்மையினைக் கண்டறிய ஆங்கில, தமிழ் வைத்தியர்கள் அழைக்கப்பட்டார்கள். நோயாளியைப் பார்க்க வருகின்ற ஒவ்வொரு ஆங்கில, தமிழ் வைத்தியர்களும் நோயாளியைப் பார்த்து, தத்தம் கருத்துக்களை அங்கு வைக்கப்பட்டிருக்கும்குறிப்பேட்டில்வந்த ஒழுங்கின்படி வாய்பேசாது குறித்துச்செல்லுமாறு பணிக்கப்பட்டார்கள். அதன்படிஒவ்வொருவரும் தத்தம் கருத்துக்களை குறித்து விட்டுச் சென்றார்கள். இவருடைய தந்தையாரான செல்லப்பா நோயாளியின் கைநாடி பார்த்து அந்த நோயாளிக்கு மருந்துகொடுக்காது நாவரளும் நேரத்தில் ஆத்மசாந்திக்காக துளி, துளியாக முலைப்பால்கொடுங்கள் என்று குறிப்பிட்டார்.

அவர் அந்த நோயாளியின் கைநாடியைப் பார்த்த மாத்திரத்தில் அவர் பரணி நட்சத்திரத்தில் பாயில் படுத்தார்என்றும், 96 ஆம் நாள் மரணம் நிகழும் என்றும் இரவு $12\frac{1}{2}$ மணிக்கு யேசுநாதருடைய பாதத்தைஅடைவார் என்றும் கிறிஸ்தவ சமய முறையின்படி அடுத்த நாள் மாலை 4.00 மணிக்கு வட்டுக்கோட்டை கிறிஸ்தவ சவக்காலையில் நல்லடக்கம் செய்யவும் என்றும் குறித்து விட்டு மௌனமாக வெளியேறி விட்டார். அவர் குறிப்பிட்டவாறு சம்பவம் நிகழ்ந்தது.

மறு நாள் கிறிஸ்தவ பாதிரியாரால், குறிப்பேட்டிலுள்ள வைத்தியர்களால் எழுதப் பெற்ற அத்தனை விஷயங்களும் ஒழுங்காக வாசிக்கப் பெற்றன. அவற்றுள் பத்து வைத்தியர்களுடைய குறிப்புகள் சவக்காலையில் வாசிக்கப் பெற்றன.

கைநாடியின் திறமையால் குறிப்பிட்ட அந்தநேரம் மரணம் நிகழ்ந்ததையும், அடுத்து எந்தெந்த நேரத்தில் மற்ற நிகழ்ச்சிகள் நடைபெற வேண்டுமென்பதையும் குறிப்பிட்டிருந்ததைச் சுட்டிக் காட்டி, வைரமுத்து செல்லப்பா வைத்தியரைக் கௌரவித்தமை அக்கால ஆங்கிலப் பத்திரிகையில் பிரசுரமானது மேற்குறிப்பிட்ட நிகழ்வின் பின் ஒருவாரத்தில்வெள்ளைக்காரப்பாதிரியார் வைத்தியரின் இல்லத்துக்குவருகைதந்து அவருக்குப் பெரிய சன்மானம் செய்து அளவளாவிச் சென்றமை குறிப்பிடத்தக்கது.

### விக்கல் நின்றது.

செல்லப்பா வைத்தியரிடம் ஒரு தாயார்ஏழாவது பிள்ளையைப்பிரசவித்த நேரத்தில்ஏற்பட்ட விக்கல் காரணமாகக் காட்டுவதற்கு அழைத்து வரப் பெற்றார். ஏற்கனவேஆங்கில தமிழ் வைத்தியர்களிடம் காட்டியும்விக்கல்நின்றபாடில்லை. ஈற்றில் கை நாடி நிபுணராக விளங்கிய இவரிடம்வந்த போது,இவர்கைநாடிபார்த்து இரவு மருந்து தயாரித்துக் கொண்டு வரவேணும் என்றும், மிக இளமையான ஐந்து இதர வாழைக்குருத்துக்கள் கொண்டுவரும் படியும் பணித்தார். அத்தாயின் சகோதரர் ஐந்து வாழைக்குருத்துக்களையும் அன்று மாலைவேளை கொண்டு வந்து சேர்ந்தார். அவருடன் வைத்தியர் தன் சொந்த வண்டியிலேயே அந்த வீட்டுக்குச் சென்றார். அவ் வீட்டுக்காரரிடம் அவ் வீட்டின் அமைவை விபரமாகக் கேட்டு அறிந்தார். நோயாளி படுத்திருக்கும் மறு அறையின் பனை ஓலை க்கூரையில் ஒரு வட்ட ஓட்டை வைக்கும்படி கூறினார். அவர்கள் அவ்வண்ணமே செய்தார்கள். அந்த ஓட்டைக்கு நேராக நோயாளியைக் கட்டிலுடன் கொண்டு வந்து கிடத்தும்படி சொன்னார். அவ்வாறு செய்யப்பட்டது. மிக வெண்மையும், குளிர்ச்சியும்பொருந்தியஇதர வாழைக்குருத்தை அச்சகோதரன் கையில் கொடுத்து வேப்பெண்ணெய் விளக்கை அணைத்துஅரை மணி நேரத்தில் நாய் குரைக்கும் போது அந் நோயாளியின் உடம்பில் போடும்படி அவர் சொல்லியவாறு வாழைக்குருத்துப் போடப்பட்டது. நோயாளி, 'ஐயோபாம்பு'என்று பெருஞ் சத்தமிட்டார். அச் சத்தம் வந்ததுமே விக்கல் நின்று விட்டது. கணவன் விளக்கைக் கொளுத்திக்கொண்டு அறைக்குள் போகிறார். சுமார் ஒன்றரை மணித்தியாலம் எல்லோரும் கலந்து பேசிக்கொள்கிறார்கள், நோயாளி விக்கல் எடுக்காத நிலையைக் கண்டு எல்லோரும் அதிசயப்பட்டார்கள். வைத்தியரும் தன் வீடு வந்தார்.

1944 ஆம் ஆண்டு மரணத்திற்கு மூன்று நாட்களுக்கு முன் தான் இன்ன நாள் பகல் 4 மணிக்கு கொழும்பு செல்ல இருப்பதாகவும் சந்திக்க விரும்புபவர்கள் வந்து சந்தித்துக் கொள்ளும்படியும் சொல்லிய படி அந் நேரத்தில் சிவ சக்தியுடன் இரண்டறக் கலந்தார்.

### கருமமே கண்ணாயினார்

இவ் வைத்தியரின் மூத்தமகனும் 98 வது பிறந்த வருஷத்தை நினைவு கூறப்படுபவருமாகிய வைத்தியர் செல்லப்பா கந்தையா தான் இன்றும் எல்லோர் மனதிலும் தந்தையாரின் பெயராகிய 'செல்லப்பா வைத்தியர்' என்று போற்றப்படும் பெரும் பாக்கியம் பெற்றவர்.

வைத்தியர் செல்லப்பா கந்தையா 'மெய் வருத்தம் பாரார், பசி நோக்கார், கண் துஞ்சார், கருமமே கண்ணாயினார்' என்பதற்கிணங்க அவருடைய காலங்கள் கழிந்தன. எண்ணெய் மருந்து வகைகள் செய்யுங்கால் தெய்வ வணக்கம், விரத, தியான அனுஷ்டானங்களை அனுஷ்டித்தே தயாரிப்பார். நெருப்பை அணுகாமலும், நெருப்பை விட்டு விலகாமலும், தன் நிலையில் அம்பாளுக்குத் தந்தையாருடன் விளக்கேற்றலும் நோயாளர் தந்தையாரிடம் வரும் போது' அவர்களின் வரவுகுறிஅறிந்து, நோயாளியின் கைநாடி பார்த்து இன்ன மருந்து வகைகளை எடுத்துவா என்று அவர் சொல்லு முன்பேஅவ் வவற்றுக்குரிய மருந்துகளை முன் கொணர்ந்து வைப்பார்.

தந்தையார் சிவபதமடையும் வரையும் தான் வைத்தியர் செல்லப்பா கந்தையா என்பதை உலகிற்கு வெளிப்படுத்தாத ஒரு பெருந்தகை. தந்தையைத் தலைமையாகக் கொண்டே வைத்தியம் நடைபெற்றது. தந்தையார் முக்கியமாக ஒரு நோயாளியைப் பார்க்கப் போகும் நேரத்தில் ஒருநோயாளி வீட்டில் வந்து விட்டால் வரவு குறி, கைநாடி பார்த்து நோயின் நிலைப்பாடு கண்டு மருந்தைக் கொடுப்பார். இவ்வாறு தந்தையார் வைத்தியம் செய்கிறார் என்பதற்கு மான சீகமாகவே தன் கடமையில் அனுபவங்களையும், சித்திகளையும், தந்தையாரின் நல்லாசிகளையும் சேர்த்துக் கொண்டார். தன்பெயரைக் காட்டிக் கொள்வதில்லை. தந்தையார் 1944 சித்திரைத் திங்களில் சிவபத மெய்திய போதும் 1989 ஆவணி கிருஷ்ண ஜயந்தி வரையும் இவரை செல்லப்பா வைத்தியர் என்றே இலங்கை மக்கள்விசுவாசத்துடனும் அன்புடனும் அழைத்து வந்தார்கள்.

### தயாரிக்கும் முறைகள்

மருந்து எண்ணெய் பிரயோகங்களை சுருக்கமாகவும், நோயாளிகளுக்கு நோய் வந்த காலத்திலும்,அல்லாத காலத்திலும், நாட்களிலும், வாரத்திலும், மாதத்திலும் பருவ காலங்களிலும் அனுஷ்டிக்க வேண்டிய முறைகளை தேவார சமய நூல்கள், வைத்திய நூல்களை ஆதாரம் காட்டி, உணவு தயாரிக்கும் இன்னோரன்ன முறைகளை விளக்கிக் கூறுவார். மருந்தும் விருந்தும் மூன்று நாள என்பதை வற்புறுத்தாமல் கூறி முடிப்பார். தங்கள் நேரம் வீணாகிறதே என்று சொல்லி ஆழ்ந்த சிந்தையில்லாமல் முடிவுக்கு வருபவர்களைப் பார்த்து உனக்கு இங்கு மருந்து இல்லை. எங்காவது போய் வாங்கு என்று சினந்து கூறுவார்.

வைத்தியம்செய்ய வருபவர்களைப்பார்த்து வரவுக்குறி, சரக்கூற்று, கால ஓரை இவற்றையெல்லாம் கணித்து வைத்தியம்செய்து வந்தார்.

### நிறைகுறைந்த சிசுவளர்ப்பு

யாழ், மானிப்பாய் கிறீன் வைத்தியசாலையில் கடமையாற்றிய டாக்டர் 'கெனடி' நிறைகுறைந்த பிள்ளைகளை கண்ணாடிப் பெட்டியில் வைத்து வளர்ப்பதை வழமைப்படுத்தி வந்தார்.

வைத்தியர் செல்லப்பா கந்தையா கண்ணாடிப்பெட்டியில் மிக நிறைகுறைந்த பிள்ளையைவளர்ப்பதிலும்பார்க்க அப்பிள்ளையை தாயார் நிமிர்ந்துபடுத்து (மல்லாந்து) தனது இடதுமார்புடன் பிள்ளையின் நெஞ்சை அணைத்துக்கொண்டு இருந்தால் அக் குழந்தை 16 வயது தாண்டும் காலத்தில், நிறைகூடிப்பிறந்த குழந்தையின் நிறைக்கு சமனாக வருமென்பதை வழமைப்படுத்திவந்தார். இருவர் கூற்றுக்களும் முரண்பட்டன.

கண்ணாடிப்பெட்டியில் வளர்த்த பிள்ளையின் வளர்ச்சிக்குறைவையும், தாயின் இடதுமார்பில் அத்தாயின் சூட்டில்வளர்ந்த பிள்ளையின் வளர்ச்சிபற்றிய தனது அனுபவத்தில் வெற்றிகண்டமுறையையும் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்துக்கு விபரித்து ஒரு அறிக்கை எழுதியிருந்தார். கடிதத்தை 17 வருடகாலமாக ஆராய்ந்து பரீட்சித்துத் தாயின்மார்பில் வளர்ந்த பிள்ளையின் வளர்ச்சிக்கு மிக நிறைவானதுஎன்று அப்பல்கலைக்கழக மருத்துவ பேராசிரியர் E. W. எட்வேட் என்பவர் தாம் எழுதிய ஆங்கில மருத்துவ நூலில் செல்லப்பா கந்தையாவனுடைய ஆராய்ச்சியைப் புகழ்ந்துஎழுதியமை குறிப்பிடத்தக்கது.

### யோகர்சுவாமிகள் மூலம் கிடைக்கப்பெற்ற கௌரவம்

இலங்கையில ஐரோப்பியர் காலத்துக்குப்பின்பு முதல் முதலாகப்பிரதமமந்திரியாகப் பதவியேற்ற மாண்புமிகு டி. எஸ். சேனநாயக்கா காங்கேசன்துறையில் சீமெந்துத் தொழிற்சாலை திறந்து அன்று நள்இரவு யோகர்சுவாமிகளிடம்சென்று வணங்கி கலந்துரையாடும்போது, அவரின் வயிற்றில் குத்துஏற்பட்டது. தாங்கமுடியாதநிலை யோகர் சுவாமி பிரதமரைப்பார்த்து, இணுவில் கந்தசாமிகோயில் ஈசானமூலையில் செல்லப்பன் இருக்கிறான், அங்கு போங்கள் என்றுசொல்லி அனுப்பும் அளவுக்கு அவரின் வைத்தியத் திறமை அமைந்திருந்தது.

(6 பக்கம் பார்க்க)

## தினசரி தியானம்

## அன்னதானம்

தானம் செய்பவரது உள்ளத்தை அன்னதானம் தூய்மை செய்கிறது. மற்றவர்களுக்கு அன்னதானம் செய்து, அதனால் மகிழ்ச்சி கொள்ளும் ஒருவர், உலகத்துக்கான அன்பை அல்லது சகோதரத்துவத்தை வளர்க்கிறார். இறைவன் எல்லோருடைய உள்ளங்களிலும் உள்ளார் என்பதை உணர்ந்து, பசியுடன் இருப்பவர்க்கு உணவளிக்கிறார். இறைவனுக்கு அமுது படைக்கிறார். இப்படி இந்தப் பக்தி மனப்பான்மையானது, அன்னதானம் செய்பவரது இதயத்தைத் தூய்மைப்படுத்துகிறது.

சுவாமி சிவானந்தர்

## மரணமான ஈ.பி.டி.பி உறுப்பினரின் மருத்துவப் பரிசோதனை நேற்று இடம்பெறவில்லை

(யாழ்ப்பாணம்)

அனலைதீவில் மர்மமான முறையில் மரணமடைந்த ஈ.பி.டி.பி உறுப்பினர் எஸ்.புஸ்பராசாவின் சடலம் நேற்று மாலைவரை மருத்துவப்பரிசோதனைக்கு உட்படுத்தப்படவில்லை.

இதனால் இது பற்றிய விசாரணைகள் எதுவும் இடம் பெறவில்லை.

நேற்று முன்தினம் நள்ளிரவு ஊர்காவற்றுறைப் பொலிசாரால் பிரஸ்தாப நபரின் சடலம் யாழ் போதனாவைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

அனேகமாக இன்று மருத்துவப்பரிசேதனைகளும் விசாரணைகளும் இடம்பெறுமென்று எதிர் பார்க்கப்படுகின்றது.

இதேவேளை நேற்றுப் பிரஸ்தாப நபரின் காதலியை ஊர்காவற்றுறைப் பொலிசார் விசாரணை மேற்கொண்டதாகத் தெரியவருகிறது. (இ)

## ஆதாரம்காட்டிப் பெறவும்

(அச்சுவேலி)

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் கைச்சங்கிலி ஒன்று கண்டு எடுக்கப்பட்டு வைத்தியசாலை நிர்வாகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

உரியவர்கள் ஆதாரம்காட்டி வைத்தியசாலை நிர்வாக உத்தியோகத்தரிடம் பெற்றுக்கொள்ள முடியுமென்று தெரிவிக்கப் படுகின்றது. (இ-5-14)

## மாணவியைக் காணவில்லை

(அச்சுவேலி)

தனியார் கல்வி நிறுவனத்திற்குச் சென்ற மாணவியைக் காணவில்லை என்று பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மந்திகை ஆஸ்பத்திரி வீதியைச் சேர்ந்த க.பொ.த சாதாரணதர வகுப்பில் கல்வி பயிலும் செல்வரட்ணம் செல்வராணி (வயது 17) என்ற மாணவி கடந்த 5ம் திகதி மாலுச்சந்தியிலுள்ள தனியார் கல்வி நிறுவனத்துக்குச் சென்றதாகவும், ஆனால் இன்றுவரை அவர் வீடுதிரும்பவில்லை எனவும் பொலிசில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (இ-5-14)

## ஓமந்தை சூனியப் பிரதேசத்திற்கு அரச - புலிப்பிரதிநிதிகள் உலங்கு வானூர்தியில் சென்றனர்.

(கொழும்பு)

ஓமந்தை சூனியப்பிரதேசத்தில் இடம் பெற்ற பாதுகாப்பு தொடர்பான உப குழுக் கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக அரசு பிரதிநிதிகள் குழுவும், விடுதலைப்புலிகள் பிரதிநிதிகள் குழுவும் இரண்டு விசேட உலங்கு வானூர்திகள் மூலம் ஓமந்தை சூனியப்பிரதேசத்தை நேற்றுக் காலை 9மணிக்கு வந்தடைந்தன.

விமானப்படைக்குச் சொந்தமான உலங்கு வானூர்தி ஒன்றில் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுத்தலைவர் மேஜர் ஜெனரல் ரொண்டவியூரி ஹெவ்டே, பாதுகாப்பு அமைச்சின் தலைவர் ஒஸ்ரின் பெர்னாண்டோ, நோர்வேத் தூதுவர் ஜோன்வெஸ்பேர்க் ஆகியோரும்;

மற்றொரு உலங்கு வானூர்தியில் பாதுகாப்புத்துறை அதிகாரிகளும், தமிழீழ நிர்வாகசேவைப் பொறுப்பாளர் பூவண்ணன், தமிழீழ விடுதலைப்புலிகளின் சமாதான செயலணிச் செயலாளர் புலித்தேவனும் வந்து சேர்ந்தனர். (ம)

## பாராளுமன்றை பகிஷ்கரித்த மு.கா.எம்பிகளில் ஒருவரே பிரசன்னம்

(கொழும்பு)

பாராளுமன்ற அமர்வுகளை பகிஷ்கரித்து வந்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் ஒன்பது உறுப்பினர்களில் பிரதி அமைச்சர் அப்துல்காதர் மாத்திரமே பாராளுமன்ற அமர்வுகளில் கலந்து கொண்டார்.

கட்சியின் ஏனைய உறுப்பினர்கள் இன்று திங்கட்கிழமை நாடாளுமன்ற அமர்வுகளில் கலந்து கொள்வார்கள் என கட்சி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

தாம் முன்வைத்த ஐந்து கோரிக்கைகளுக்கும் பிரதமர் விக்கிரமசிங்க திருப்திகரமான பதிலை தந்திருப்பதாலேயே தாம பகிஷ்கரிப்பை விட்டதாகவும் நாடாளுமன்ற உறுப்பினர் அன்வர் இஸ்மயில் தெரிவித்திருந்தார்.

எனினும் வழங்கப்பட்ட வாக்குறுதிகள் மீறப்படும் சந்தர்ப்பத்தில் பகிஷ்கரிப்பு மீண்டும் மேற்கொள்ளப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (பி- 8)

## உயர்பாதுகாப்பு.....

அதிரடிப்படை பொலிஸ் அதியட்சகர் நிமால் லியுகே, சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மஜித் பிரிகேடியர் பாலசூரிய ஆகியோரும்

தமிழீழ விடுதலைப்புலிகளின் சார்பில் கேணல் கருணா அம்மான் தலைமையில் கேணல் தீபன், கேணல் ஜெயம், கேணல் பதுமன், வவுனியா மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் எழிலன், யாழ் மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி, திருகோணமலை மாவட்ட அரசிற்துறைப் பொறுப்பாளர் திலக் மட்டக்களப்பு மாவட்ட அரசியற்த்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன், கடற்புலிகளின் தளபதிகளில் ஒருவரான லெப். கேணல் செழியன், விடுதலைப் புலிகளின் சமாதான செயலணிச செயலாளர் புலித்தேவன் அரசியல் நிர்வாகத்துறைப் பொறுப்பாளர் தங்கன் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

இச்சந்திப்பின் போது மாவட்ட ரீதியாக உயர் பாதுகாப்பு வலயங்களில் மக்களை மீளக்குடியமர்த்துவதற்கு உப குழுக்கள் அமைப்பது எனவும் இக்குழுக்கள் சந்திப்பதற்கான திகதிகளும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளன. (ம)

## பாதுகாப்பு உப குழு..

சமாதான செயலணிச் செயலாளராக இருக்கும் புலித்தேவன் மேலும் தெரிவிக்கையில்:-

வலி வடக்கில் •35 சதவீதமான பிரதேசம் இராணுவ வலயமாக இருப்பதை இரு தரப்பினருக்கும் சுட்டிக் காட்டிய போது பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாட்டோ இது விடயத்தில் உரிய நடவடிக்கை எடுப்பதாக உறுதியளித்திருப்பதாகவும் கூறினார். (ம)

## தவளைப் பாய்ச்சல் 9 ஆண்டுகள் நிறைவு

(கிளிநொச்சி)

1993ஆம் ஆண்டு விடுதலைப் புலிகள் மேற்கொண்ட ''தவளைப் பாய்ச்சல்'' இராணுவ நடவடிக்கை மூலம் பூநகரி இராணுவ முகாம் தாக்கியழிக்கப்பட்ட வெற்றி விழா இன்று எழுச்சியுடன் கொண்டாடப்படவுள்ளது.

பூநகரி இராணுவ முகாம் தாக்கியழிக்கப்பட்ட போது விடுதலைப்புலிகள் முதல் தடவையாக ''டாங்கி'' ஒன்றையும் நீருந்து விசைப்படகுகளையும், எறிகணை செலுத்திகளையும் மற்றும் பெருமளவு ஆயுத தளபாடங்களையும் கைப்பற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

## முஸ்லிம் காங்கிரஸின்...

இருப்பதால் அக் கூட்டத்தில் ஒழுங்கான முடிவுகள் எடுக்கப்பட்டால் சரி, இல்லாது போனால் நாம் தனித்தே பாராளுமன்றத்தில் செயற்பட வேண்டிவரும் என்றும் தெரிவித்துள்ளார். (ம)

## தாய்வான் மருத்துவக்..

கழகத்தின் தலைவர் பேர்னிடோல் கண்டி மெற்றோ பொலிரன் றோட்றிக் கழகத்தின் தலைவர் சிவசுப்பிரமணியம் ஆகியோரும வருகை தருகின்றனர்.

யாழ் வரும் இம் மருத்துவக் குழுவினரை யாழ் றோட்டறிக் கழகம் வரவேற்கவுள்ளது.

இவ் வரவேற்பு வைபவம் இன்று காலை 8.30மணிக்கு உதயன் பத்திரிகைக் காரியாலத்தில் நடை பெறவுள்ளது.

இக் குழுவினர் பிற்பகல் 4.30 மணிக்கு மூளாய் கூட்டுறவு மருத்துவ மனைக்குச் சென்று அங்குள்ள நோயாளர்களின் தேவைகள் குறித்தும் கலந்துரையாடவுள்ளனர். (இ)

## பெற்றகுழந்தையைக் கொன்ற தாய் கைது!

### ஏழாலையில் சம்பவம்

(ஏழாலை)

பெற்ற குழந்தையை கொலை செய்து வீட்டுவளவினுள் புதைத்த பெண் ஒருவரை சுன்னாகம் பொலிசார் கைது செய்துள்ளனர்.

இச்சம்பவம் ஏழாலை தெற்கு மயிலங்காடு எனும் இடத்தில் இடம் பெற்றுள்ளது.

பிரஸ்தாப பெண் அண்மையில் தான் பெற்றெடுத்த பெண் குழந்தையை கொலை செய்து விட்டு, பக்கத்து வீட்டுப் பெண்ணின் உதவியுடன், அதனை வீட்டு வளவினுள் புதைத்துள்ளார்.

அப்பகுதி கிராமசேவகரின் உதவியுடன் வீட்டு வளவினுள் புதைக்கப்பட்ட குழந்தையின் சடலத்தை, கடந்த 8ந் திகதி சுன்னாகம் பொலிசார் தோண்டி எடுத்துள்ளனர்.

இதனையடுத்து பிரஸ்தாப பெண்ணையும் பொலிசார் கைது செய்துள்ளனர். (இ-12)

## பல்கலை மாணவன்..

ஆறு மாணவர்களும் வேறு இடங்களில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இத் தேடுதல் வேட்டையில் சுமார் 150 பொலிஸார் ஈடுபடுத்தப் பட்டனர்.

இத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக மேலும் 26 சந்தேக நபர்கள் பொலிஸாரினால் தேடப் பட்டு வருகினறனர்.

சந்தேக நபர்கள் வெளி இடங்களில இருப்பதாக கிடைத்த தகவல்களை அடுத்து அவ்விடங்களுக்கு 4 பொலிஸ் குழுக்கள் அனுப்பி வைககப்பட்டுள்ளன.

இதேவேளை இச் சம்பவத்தில் படு காயமடைந்த இன்னொரு மாணவன் கவலைக்கிடமான நிலையில் இருப்பதாகவும் அம் மாணவன் கொழும்பு தேசிய வைத்தியசாலையின் அவசர சிகிச்சை பெற்று வருவதாகவும் ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ம)

## அமைச்சர்களின்...

பப்பட்ட வெள்ளிக்கிழமை ஜனாதிபதியினால் திருப்பி அனுப்பப் பட்டுள்ளது.இவர்கள் அமைச்சர்களாக நியமிக்கப்படும் பட்சத்தில் அமைச்சர்களும், அமைச்சரவை அந்தஸ்து அற்ற அமைச்சர்களுமாக மொத்தம் 66பேர் இருப்பார்கள். அமைச்சரவை அந்தஸ்தற்றவர்கள் அமைச்சர்களுக்குரிய சலுகைகளைப் பெற்றாலும் அமைச்சரவைக் கூட்டங்களில் பங்கு பற்ற முடியாது அத்துடன் அமைச்சர்கள் யாவரும் எம்.பிக்களுக்குரிய சம்பளமே பெறும் உரித்துடையவர்களாவர். பிரதி அமைச்சர் பதவிக்கு சிபார்சு செய்யப்பட்டிருக்கும் ஜயசுந்தர விஜயக்கோன் கடந்த ஆண்டு பொ.ஐ.முன்னணியில் இருந்து ஐ.தே முன்னணிக்கு கட்சி மாறியவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ந)


## கேள்வி அறிவித்தல்

### யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அழுக்குத்துணிகளைக் கழுவுதல் -ஆண்டு 2003

யாழ்ப்பாணம் போதனாவைத்தியசாலை கேள்விச்சபைத் தலைவரால் யாழ் போதனாவைத்தியசாலைக்கு 2003-ம் ஆணடுக்கான அழுக்குத் துணிகளைக் கழுவுவதற்காக சீலிடப்பட்ட கேள்விகள் கோரல்.

1. பிரதேசச் செயலாளரிடமிருந்து பெறப்பட்ட பொது 170 படிவத்தில் சொத்துச் சான்றிதழ் மற்றும் ரூபா 500 மீளளிக்கப்படாத கேள்வி வைப்பாக வைத்தியசாலை பணிப்பாளர் கணக்காளர் அலுவலகத்தில் செலுத்தி பெறப்பட்ட பொது 172 பற்றுச்சீட்டுடன் தமது அடையாள அட்டையையும் சமர்ப்பித்து 2002-11-20 பிற்பகல் 2.00 மணிவரை பணிப்பாளர் அலுவலகத்திலிருந்து கேள்விப்படிவத்தை பெற்றுக் கொள்ளலாம்.
2. கேள்விகள் அடங்கிய தபால்கள் சீலிடப்பட்டு இடது பக்க மேல் மூலையில் 2003ஆம் ஆண்டிற்கு அழுக்குத் துணிகளைக் கழுவுதல் என குறிப்பிட்டு பணிப்பாளர், போதனா வைத்தியசாலை யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு 21.11.2003 முற்பகல் 10 மணி அல்லது அதற்கு முன்பு கிடைக்கக்கூடியதாக தபால் மூலமோ, நேரடியாகவோ இப்பணிமனைக் கேள்விப் பெட்டியில் இடலாம்.
3. கேள்விகள் மூடப்பட்டதும் உடனடியாக அதே இடத்தில் கேள்விகள் திறக்கப்படுவதோடு கேள்விதாரர் அல்லது அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதி ஒருவர் அச்சந்தர்ப்பத்தில் சமுகமளிக்கலாம்.
4. கேள்விகளுடன் சம்பந்தப்பட்ட கேள்விப்பிணை அல்லது பெறுமதிக்கு சுகாதாரசேவைகள் பணிப்பாளர் பெயருக்கு பணம் வைப்பிட்டு பெறப்படும் பற்றுச்சீட்டின் மூலப்பிரதி, மற்றும் சுகாதாரசேவைப் பணிப்பாளர் சுகாதார வைத்திய அதிகாரியின் சான்றிதழையும் இணைத்திருத்தல் அவசியம்.
5. மேலதிக விபரங்களுக்கு போதனா வத்தியசாலைக்கணககாளருடன் தொடர்பு கொள்ளவும்.

வைத்திய கலாநிதி.எஸ். சதுர்முகம்,
பணிப்பாளர்,
போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

[C/5232]



## அறிவித்தல்

205-207-209-211-213 ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணத்தில் உள்ள ஆதனங்களை எனது பெயரில் யாழ் மாநகரசபை பதிவேட்டில் மாற்றம் செய்யவுள்ளேன். இவ்வாதனத்துக்கு உரித்துடையோர் யாரும் இருப்பின் தங்கள் எதிர்ப்பை இரண்டு வாரத்துக்குள் தெரிவிக்கலாம.

சி.பரமநாதன்,
இலக்கம் -27,
8 வது ஒழுங்கை,
கொழும்பு .3 .

|6175|



## YOGI HOME SCIENCE ACADEMY
## X' MAS DEMONSTRATION CLASSES

பண்டிகைக்கால மனையியல் செய்முறை விளக்க வகுப்புக்கள் 3 நாட்களுக்கு மட்டும்

1. 4 கேக்கலவைகள் - 17.11.2002மு.ப.11.00 மணி - 3.00மணிவரை
   (i) Rich Cake (ii) Love Cake (iii) Light Fruit Cake (iv) Eggless Butter Cake
2. 5 Sweets வகைகள் - 19.11.2002 மு.ப.10.00 மணி -2.00 மணிவரை
   (i) பால்கோவா (ii) மைசூர்பாகு (iii) பால்மா சொக்லட் (Milk Powder Chocalate) (iv) மாஸ்மெல்லோ (v) ரவாகேசரி
3. கிறிஸ்டல் அழகுப் பொருள் செய்முறை (CRYSTAL ORNAMENTS) 19.11.2002 பி.ப.3.00 மணி - 4.30 மணிவரை.
4. 4பேஸ்ரி வகைகள் (PASTRY'S) 24.11.2002 மு.ப.10.00மணி-2.00 மணிவரை
   (i) Puff Pastry (ii) Short Crust Pastry Pies (iii) Choux Pastry (vi) Pizza

அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டிருப்பதால் இதில் கலந்து கொள்வோர் முற்கூட்டியே பெயர்களைப் பதிவு செய்யவும்.

தொடர்பு 75, அம்மன் றோட், நல்லூர், யாழ்ப்பாணம்.
[நல்லூர் வீரமாகாளி அம்மன் கோயில் முன்பாக]

|6177|


இப்பபத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தினரால் இல.15, வெள்ளாந் தெரு, யாழ்ப்பாணம் என்னும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில 11.11.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.